AHARAM
அகரம்
தரம் 5 - 11 வரை எண்: 10 எழுத்து: 12 டிசம்பர் - 2016 www.aharam.lk

# தோல்வி என்பதே இல்லை...!




50/-
மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06



**இன்னும் பூமி போன்ற பல கோள்கள் இருக்க வேண்டுமென்றும் இன்னும் ஜீவராசிகள் இருக்க வேண்டுமென்றும் கூறி வந்த விஞ்ஞானம், அதற்கு ஒரு படி மேலே சென்று இப்பிரபஞ்சம் மட்டுமல்ல, இதனையும் தாண்டி பல பிரபஞ்சங்கள் இருக்க வேண்டுமென நம்புகின்றது.**

22




24



38



32




AHARAM அகரம்

எண்: 10 - டிசம்பர் : 2016 - எழுத்து: 12






ஆசிரியர்
எம். றிஸ்வி ஸுபைர்

**ஆலோசனைக் குழு**

அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச். எம். ஹஸன் M.Ed
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

அன்பு ஜவஹர்ஷா
(ஓய்வு பெற்ற அதிபர்)

துணை ஆசிரியர்
வ. முஹம்மத் நபீல்

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்


## பாடத்திட்டம்


| | |
|---|---|
| தகவல் தொடர்பாடல் | 30 |
| அரபு மொழி | 14 |
| வரலாறு | 20 |





36


தொடர்புகளுக்கு:

அகரம்
77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை
கொழும்பு 00900
தொ.பே : 077 741 2561
பெக்ஸ் : 011 268 6030
Web : www.aharam.lk
E.mail : aharamipc@gmail.com



சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப் பிரதி | : 50/= |
| 1 வருட சந்தா | : 800/= |
| 6 மாத சந்தா | : 400/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னொரு விடுமுறை... நீங்கள் தயாரா?

டிசம்பர் விடுமுறை பற்றிய கனாக்கள், மூன்றாம் தவணைப் பரீட்சையை வெற்றி கொள்வதற்கான கல்விச் செயற்பாடுகள் என நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கும் உங்களை மீண்டும் அகரம் இதழினூடாக சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

டிசம்பர் விடுமுறைக்கான காலம். அந்த நாட்களை எவ்வாறு கழிக்க வேண்டும் என பல திட்டங்களைத் தீட்டி அதற்கான பல முன்னெடுப்புக்களையும் இப்போது செய்து கொண்டிருப்பீர்கள்.

சுற்றுலாக்கள் உங்கள் டிசம்பர் நேரசூசியில் முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும். அல்லாஹ்வின் அற்புத அத்தாட்சிகளைக் கண்டு களித்து ஆழ்மனதால் அவனைப் புகழ்வது உண்மையில் மிகப் பெரும் பாக்கியமாகும். அதேவேளை, எத்தகைய சுற்றுலாவாக இருப்பினும், தொழுகையில் பொடுபோக்காக இராமலும் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி நம் செயற்பாடுகளை அமைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.

சுற்றுலாக்கள் என வரும்போது தொலைதூர மலைகளையும் மௌனமாக நீண்டிருக்கும் கடற்கரைகளையும் மாத்திரம் சிந்திக்காமல் உங்கள் உறவினர்களைப் பற்றியும் ஒரு கணம் சிந்தியுங்கள். உறவினர்களின் வருகைக்காக காத்திருக்கும் முதியவர்களையும் உங்களுக்கு சிறு வயதுகளில் கற்றுத் தந்த ஆசிரியர்களையும் தேடிச் சென்று சந்தியுங்கள். நமது எதிர்கால முன்னேற்றத் திற்கு அவர்களது தூய பிரார்த்தனை நிச்சயம் உறுதுணையாக அமையும்.

நூல் எழுதுதல் டிசம்பர் விடுமுறையை பயனுள்ள வழியில் பயன்படுத்த உதவும் அற்புதமான வழிமுறையாகும். வழமையான விடுமுறைகளைப் போலல்லாது இந்தப் புதிய ஆக்கபூர்வமான முயற்சியில் ஈடுபடுவது உண்மையில் உங்கள் ஒவ்வொரு நொடியையும் சுவாரஷ்யப்படுத்தும்.

பழைய அகரம் இதழ்களை தூசு தட்டி எடுங்கள். வரலாறு, விளையாட்டு, தொழிநுட்பம், கல்வியல், பொது அறிவு அல்லது இவை போன்ற ஒரு தலைப்பைத் தெரிவு செய்து, அதனுடன் தொடர்பான நூல்களையும் நூலகத்தில் இருந்து பெற்றுக் கொள்ளுங்கள்.

குறிப்பிட்ட தலைப்பு சம்பந்தமான அனைத்துக் குறிப்புக்களையும் சேகரித்து மொத்தமாக தொகுத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் உங்கள் தலைப்பை சிறு சிறு தலைப்புக்களாகப் பிரித்து அவற்றின் கீழ் நீங்கள் தொகுத்த குறிப்புக்களை கட்டுரை வடிவில் எழுதுங்கள்; மொழியை செம்மைப்படுத்துங்கள்; பொருத்தமான புகைப்படங்களையும் இணையுங்கள்.

உண்மையில் அற்புதமான முயற்சி இது. அழகான பொழுதுபோக்காக மட்டுமின்றி, உங்கள் அறிவியலை வளர்க்கும் உன்னத செயலாகவும் இந்த நூலாக்க முயற்சி அமையும்.

ஓய்வு என்பது மாற்று வேலையே தவிர தூக்கத்தில் தொலையும் சோம்பல் பொழுதல்ல. புதிதாக சிந்தியுங்கள்; புதிய பாதைகளை உருவாக்குங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜித் (இஸ்லாஹி)

அன்னை ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் அறிவிக்கிறார்கள். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சுத்தம் செய்தல், தலை வாருதல், செருப்பு அணிதல் போன்ற அனைத்துக் காரியங்களிலும் வலது புறத்திலிருந்து துவக்குவதையே விரும்புபவர்களாக இருந்தார்கள். (புஹாரி, முஸ்லிம்)

இஸ்லாம் காட்டித் தந்துள்ள ஒழுக்க விழுமியங்கள் மூலம் தன்னை அழகுபடுத்திக் கொள்ள விரும்புகின்ற ஒரு மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றான வலது புறத்தை முற்படுத்துவதை தெளிவுபடுத்துவதாக மேற்படி ஹதீஸ் அமைந்து காணப்படுகின்றது.

மனித வாழ்வின் கண்ணியத்தையும் கௌரவத் தையும் தனது போதனைகளின் ஊடாக வளர்த்தெடுக்க முற்படும் இஸ்லாம், ஒரு விடயத்தை மனிதனுக்கு அறிமுகம் செய்துள்ளது என்றால் அதன் மூலம் சீரிய குணத்தின் பால் வழிகாட்டி, பயனற்ற துர்குணத்திலிருந்து காத்து, அல்லாஹ்வின் அன்புக்குரியவனாக அவனை மாற்ற விழைகிறது என்றே பொருளாகும்.

வலது பக்கத்தை முற்படுத்துவது இஸ்லாம் விரும்புகின்ற, அதன்பால் ஊக்கப்படுத்துகின்ற ஒரு விடயமாக காணப்படுவதை நாம் மேலுள்ள ஹதீஸின் வாயிலாக அறிகிறோம். இங்கு நபியவர்கள் வுழு செய்தல், குளித்தல் போன்ற சுத்தம் செய்கின்ற விடயங்களையும் தலை வாருவதையும், செருப்பு அணிவதையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள். ஆனால், அவ்வப்போது வேறு சில விடயங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

''உங்களில் ஒருவர் உண்பதாயின் வலக் கரத்தால் உண்ணட்டும், குடிப்பதாக இருந்தால் வலக் கரத்தால் குடிக்கட்டும். ஏனெனில், நிச்சயமாக ஷைத்தான் இடது கரத்தினாலேயே உண்கின்றான், குடிக் கின்றான்.'' (முஸ்லிம்)

இங்கு நபியவர்கள் இடது கரத்தால் உண்பதையும் குடிப்பதையும் ஷைத்தானின் செயற்பாடாக சுட்டிக் காட்டியுள்ளார்கள். அப்படியாயின் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது நீர் அருந்துவதாயின் எவ்வாறு நடந்து கொள்வது என்ற கேள்வி உங்களிடம் எழலாம். இப்படியான இக்கட்டான சந்தர்ப்பங்களில் இடது கையால் நீர்க் குவளையைப் பிடித்து வலக் கையால் தாங்கி அருந்துவதே சிறந்ததாகும்.

ஷைத்தான் மனித இனத்தின் எதிரியாகவும், மனிதனை வழிகெடுப்பதற்காக அல்லாஹ்விடம் சபதம் செய்து தனது அனைத்து நேரங்களையும் அதற்காகவே செலவிடுபவனாகவும் இருக்கின்றான். இத்தகைய மிக மோசமான, பல வடிவங்களில் மனிதனை வந்தடைகின்ற ஷைத்தானின் அலங் காரங்களுக்கு கட்டுண்டு மதிமயங்கி அவனின் செயற்பாடுகளை முன்மாதிரிகளாகவும் நாகரிகமாகவும் கொள்கின்றவர்கள் மறுமையில் கைசேதத்தையே விளைவாகப் பெறுவர்.

இதனால்தான் ஷைத்தானின் வழக்கத்திற்கு முரண்படும் வகையில் வலதை முற்படுத்துமாறு வழிகாட்டிய நபியவர்கள், ஷைத்தான் அதிகம் குடிகொண்டிருக்கும் மலசல கூடத்திற்குள் நுழையும் போது ஷைத்தானின் தீங்குகளை விட்டும் அல்லாஹ் விடம் பாதுகாவல் தேடி இடது காலை முதலில் நுழைத்து செல்லுமாறும் வெளியேறும்போது வலது காலை முற்படுத்தி வெளியேறுமாறும் வழிகாட்டினார்கள்.

இன்று சிலர் மற்றவர்களுக்கு முன் நின்று கொண்டு, இடது கரத்தால் உண்பதையும் குடிப்பதையும் பெருமையாக நினைத்து செய்கின்றனர். இது முற்றிலும் இஸ்லாத்தின் வழிகாட்டல்களுக்கு புறம்பான செயல் என்பதை புரிந்து கொள்தல் அவசியமாகும். இத்தகைய செயற்பாடுகளைக் கண்டு ஷைத்தான் பெரு மகிழ்ச்சியடைகின்றான்.

மேலும் நபியவர்கள் கூறினார்கள்: ''உங்களில் ஒருவர் செருப்பை அணிந்தால் வலது பக்கத்திலிருந்து ஆரம்பிக்கட்டும். அதைக் கழற்றினால் இடது பக்கத்திலிருந்து ஆரம்பிக்கட்டும். முதலில் வலது காலில் அணிவிக்கப்படவும், கடைசியில் கழற்றப் படவும் என்று அமையட்டும்.'' (புஹாரி, முஸ்லிம்)

இந்த ஹதீஸின் வாயிலாக செருப்பை அணியும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கை சொல்லித் தந்த நபியவர்கள் செருப்பை அணியும்போதும் வலதையே முற்படுத்துமாறு பணித்துள்ளார்கள். அதேபோன்றுதான் ஆடை அணியும் போதும் வலதையே முற்படுத்துமாறு வழிகாட்டியுள்ளார்கள்.

நபியவர்கள் பல நல்ல விடயங்களை செய்கின்ற போது வலதை முற்படுத்தச் சொல்லி வழிகாட்டி யுள்ளார்கள் என்பதையே மேற்கூறப்பட்ட ஹதீஸ் களின் பொருளாக நாம் விளங்கிக் கொள்கின்றோம்.

எனவே, நாம் எமது சிறு பராயத்திலேயே உண்ணுதல், பருகுதல், ஆடை அணிதல், தலை வாருதல், சுத்தம் செய்தல், பாதணி அணிதல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின்போது எமது வலதை முற்படுத்தி பழகிக் கொள்கின்றபோது எம் பிற்காலத்திலும் நபியவர்களின் சுன்னாவை தவறாது அழகிய முறையில் கடைப்பிடிக்கின்ற மனிதர்களாக மாறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலத்தில்: ஸனீயாஸ்னைன் கான் (இந்தியா)
தமிழில்: ஹஸன் இக்பால், யாழ்ப்பாணம்



# அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்கள்

## 1. மதீனா



இஸ்லாமியர்களின் புனித நகர்களில் ஒன்றான மதீனா நகரம் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹிஜ்ரத்திற்கு முன்னர் யத்ரிப் என அழைக்கப்பட்டு வந்தது. பின்னர் காலப்போக்கில் மதீனதுன் நபி (நபியின் நகர்) என வரலாற்றில் புகழ் பெற்றது. தனது அந்திம காலம் வரை மதீனாவிலேயே வாழ்ந்த நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், மதீனா நகரையும் மதீனத்து மக்களையும் தனது உயிரிலும் மேலாக நேசித்தார்கள். மஸ்ஜிதுன் நபவியும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடமும் மதீனாவிலேயே அமைந்துள்ளன. மதீனா நகரை தரிசிப்பது ஹஜ் கிரியைகளில் உள்ளடங்காது எனினும், ஹஜ் யாத்திரிகர்கள் பெரும்பாலும் மதீனதுன் நபவியை தரிசிப்பது வழக்கம்.

## ௨. மத்யன்



எகிப்துக்கும் சிரியாவுக்கும் இடைப்பட்ட பிரதேசமே மத்யன் பிரதேசமாக கருதப்படுகிறது. இங்கு வாழ்ந்த மக்கள் ஆரம்ப காலங்களில் இப்ராஹிம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் போதனைகளை நெறிதவறாது பின்பற்றி வாழ்ந்தாலும் காலப்போக்கில் தம் மனோ இச்சைக்கு அடிமையாகத் தொடங்கினர். வியாபாரத்தில், அளவு நிறுவைகளில் மோசடி செய்யத் தொடங்கினர். வழிதவறிய இம்மக்களை நேர்வழிப்படுத்துவதற்காக சுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நபியாக அனுப்பி வைக்கப்பட்டார். எனினும், மத்யன் வாழ் மக்கள் இவரை நிராகரித்தமையால் பாரிய நிலநடுக்கம் ஒன்றை ஏற்படுத்தி அல்லாஹ் இம்மக்களை அழித்து விட்டான். பிர்அவ்னின் அச்சுறுத்தல் காரணமாக எகிப்தை விட்டு நீங்கி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மத்யன் வந்தடைந்தார்கள். அங்கே நபி சுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மகள்மாரில் ஒருவரை மணமுடித்தார்கள்.

## ௩. இரம்

செங்கடலின் தென்பகுதியில் இரம் எனும் பிரதேசத்தில் ஆது சமூகத்தினர் வசித்து வந்தனர். இவர்கள் செல்வச் செழிப்பும் உடல் வலிமையும் மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். மலையுச்சிகளில் பாரிய கோபுரங்கள் அமைத்து வாழ்ந்தனர். ஆது சமூகத்தினர் பாவங்களில் மூழ்கித் திளைத்த காரணத்தினாலும் நபி ஹூத் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் அழைப்பை புறக்கணித்தமையினாலும் அல்லாஹ்வின் கோபப் பார்வைக்கு ஆளானார்கள். ஏழு இரவுகள், எட்டு பகல்கள் இடையறாது வீசிய பலத்த காற்றினால் ஆது சமூகத்தினரை அல்லாஹ் அழித்தான். அல்குர்ஆனில் 'தூண்களின் நகர்' என வர்ணிக்கப்பட்ட இப்பிரதேசம் ஓமான் நாட்டில் அமைந்துள்ளதாக தொல்பொருள் ஆய்வாளர்கள் புராதன கட்டிடச் சிதைவுகளைக் கொண்டு கண்டறிந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஜெரூசலம்



கி.பி. 638 இல் ஜெரூசலம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது. இந்நகர் ஏகத்துவத்தைப் போதிக்கும் மதங்களின் புனித நகர் எனலாம். இஸ்லாமியர்களைப் பொறுத்தமட்டில் மக்கா, மதீனாவுக்கு அடுத்தபடியாக ஜெரூசலம் புனிதமிகு நகராகக் கருதப்படுகிறது. நபி இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் போதித்த முதல் கிப்லாவாக ஜெரூசலம் திகழ்ந்தது. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மிஃராஜ் விண்வெளிப் பயணம் மூலம் முஸ்லிம்கள் மத்தியில் ஜெரூசலம் சிறப்புப் பெறுகிறது.

## 5. பாபிலோன்

புராதன நகரான பாபிலோன் அக்காலத்தில் சூனியக் கலைக்கு புகழ் பெற்றிருந்தது. பக்தாத்தின் தென்பகுதியில் யூப்ரடீஸ் நதியோரம் இந்நகர் அமையப் பெற்றதாக இந்நகரின் சிதைவுகளைக் கொண்டு அறியப்படுகிறது. சூனியத்தினால் பாவத்தில் மூழ்கியிருந்த பாபிலோன் நகர மக்களை எச்சரிப்பதற்காக ஹாரூத், மாரூத் எனும் இரு மலக்குகள் அனுப்பி வைக்கப்பட்டதாக அல்குர்ஆன் கூறுகிறது.



## 6. தூவா

தூவா நகரத்தின் தூர் மலையடிவாரத்திலே நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுடன் அல்லாஹ் நேரடியாக உரையாடி தூதுத்துவத்தை கையளித்தான். மத்யன் நகரிலிருந்து தனது குடும்பத்துடன் பயணித்துக் கொண்டிருந்த சமயத்தில்தான் இச்சம்பவம் நடைபெற்றது.

## 7. மக்கா



'நகரங்களின் தாய்' என வர்ணிக்கப்படும் மக்கா நகர் விசுவாசிகளின் புனிதமிகு நகராகும். இதனை நோக்கியே உலக சனத்தொகையில் கால்வாசி மக்களான முஸ்லிம்கள் அனைவரும் ஐவேளை தொழுகையை நிலைநாட்டுகிறோம். இப்ராஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் நிர்மாணித்த கஃபாவைக் கொண்டும் இறுதி இறைத்தூதரின் பிறப்பிடம் என்பதன் மூலமும் இந்நகர் புனிதம் பெறுகிறது. வருடந்தோறும் மில்லியன் கணக்காக மக்கள் ஹஜ் மற்றும் உம்ரா கிரியைகளை நிறைவேற்ற மக்கா நகர் நோக்கி படையெடுக்கின்றனர்.

## 8. தாயிப்

இஸ்லாத்தை பிரசாரம் செய்வதற்காக கி.பி. 628 இல் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தனது குடும்ப சகிதம் மக்காவிலிருந்து தாயிப் நோக்கி பயணித்தார்கள். ஆனால், தாயிப் நகரத்து மக்களோ இறைத்தூதரின் அழைப்பைப் புறக்கணித்து ஏளனம் செய்தனர், கல்லால் அடித்துத் துன்புறுத்தினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆலிப் அலி (இஸ்லாஹி)*
www.aliaalif.tk / aalifali@gmail.com

# பிரபஞ்சத்திற்கு அப்பால் பிரபஞ்சங்கள்






**பிரமாண்டமான பிரபஞ்சம்**

எமது பிரபஞ்சம் நன்றாகக் காற்று நிரப்பப்பட்ட ஒரு பலூனைப் போன்ற மிகப் பிரமாண்டமானதொரு வெளி. இது ஒவ்வொரு வினாடியும் 300,000 கிலோ மீற்றர் (ஒளியின்) வேகத்தில் விரிவடைந்து கொண்டிருக்கின்றது. இப்பிரபஞ்சத்தில் 300 மில்லியன்களுக்கும் அதிகமான கெலக்ஸிகள் காணப்படுகின்றன. கெலக்ஸி என்பது கோடிக்கணக்கான நட்சத்திரங்களின் அல்லது ஞாயிற்றுத் தொகுதிகளின் குவியல் என்று கூறலாம். 300 மில்லியன்களுக்கும் அதிகமான கெலக்ஸிகளில் பால்வீதி (Milky way) என்றழைக்கப்படும் ஒரு கெலக்ஸியில்தான் நாம் இருக்கின்றோம். இந்த கெலக்ஸியில் மாத்திரம் 250 பில்லியன்களுக்கும் அதிகமான நட்சத்திரங்கள் (சூரியக் குடும்பங்கள்) இருக்க வேண்டுமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவற்றில் ஒன்றுதான் எமது சூரியக் குடும்பம்.

**பிரபஞ்சத்தில் மனிதன்**

சூரியக் குடும்பத்தில் எட்டுக் கோள்கள். அதில் ஒன்றுதான் எமது பூமி. இங்குதான் நாம் வாழ்கின்றோம். பூமியிலும் 71% நீர்ப் பரப்பு. 29% தான் நிலப்பரப்பு. நீர்ப்பரப்பைத் தவிர்த்துப் பார்த்தால் 29% ஆன நிலப்பரப்பில்தான் நாம் வாழ்கின்றோம். நிலத்திலும் ஆட்டிக், அண்டாட்டிக் போன்ற கடும் குளிர் பிரதேசங்களில் மனிதன் காலடி வைக்காத இடங்களும் உண்டு. சஹாரா போன்ற பெரும் பாலை நிலங்கள் காணப்படுகின்றன. அமேசன் போன்ற அடர்ந்த பயங்கரமான காடுகள் உள்ளன. நாம் வாழும் பகுதிகளிலேயே மலைகளும் பள்ளத்தாக்குகளும் சதுப்பு நிலங்களும் கணவாய்களும் நிறைந்து காணப்படுகின்றன. இவையனைத்தையும் கழித்துவிட்டுப் பார்த்தால் 29 இலும் 10 வீதமான சிறு பகுதியிலேயே மனிதன் வாழ்கின்றான். சதாவும் விரிவடைந்து கொண்டிருக்கும் பிரபஞ்சத்தில் மனிதன் என்பவன் ஓர் அற்பப் பொருளே!

**அர்ஷ், குர்ஷ் உடன் ஒப்பிட்டால்**

வினாடிக்கு 3 இலட்சம் கி.மீ. வேகத்தில் விரிவடைந்து கொண்டிருக்கும் மேற்குறிப்பிட்ட இவ்வளவு பிரமாண்டமான பிரபஞ்சத்தை அல்லாஹ்வின் சிம்மாசனம், அவன் அமர்ந்திருக்கும் அர்ஷ் உடனும் அதற்குக் கீழால் அல்லாஹ்வின் திருப்பாதங்களை வைக்கும் இடமான குர்ஷுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். குர்ஷை அர்ஷின் அருகில் வைத்தால் பெரியதொரு பாலைவனத்தில் காணாமல்போன மோதிரத்தின் அளவுதான் குர்ஷ் இருக்கும். குர்ஷையும் அதற்குக் கீழால் உள்ள எமது பிரபஞ்சத்தையும் ஒப்பிட்டால் அதுவும் பெரியதொரு பாலைவனத்தில் காணாமல்போன மோதிரத்தின் அளவுதான் இருக்கும் எமது பிரபஞ்சம். ஆக, இப்பிரபஞ்சமே அற்ப மோதிர அளவென்றால் அதில் எமது பால்வீதி எங்கே? அதில் நமது சூரியன் எங்கே? பூமி எங்கே? நாம் எங்கே? சுப்ஹானல்லாஹ்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹு அக்பர்! இவை அனைத்தையும் விட அல்லாஹ்வே மிகப் பெரியவன்.

**அல்லாஹ்வின் பேராற்றல்**


மேலுள்ள பந்திகளை வாசித்து விளங்கிய நீங்கள் தற்போது சற்றுச் சிந்தித்துப் பாருங்கள் நாம் அல்லாஹ்வை சர்வ வல்லமை மிக்க நாயனாக, அனைத்தையும் படைத்துப் பரிபாலிக்கும் ஏக இரட்சகனாக ஏற்றிருக்கின்றோம். அவன் நாடியதைச் செய்யக் கூடியவன். யாதேனும் ஒன்றை ஆக்க நினைத்தால் 'குன்' என்ற ஒரு வார்த்தையின் மூலம் ஆக்கக் கூடியவன். (19:35) இத்தனை பேராற்றலும் மிக்க வல்லவனும் மிகப் பெரியவனுமாகிய அல்லாஹ் அவனது குர்ஷியுடன் ஒப்பிடும்போது மட்டுமே மோதிர அளவுள்ள இந்த பிரபஞ்சத்தை மட்டுமே நிர்வகிக்கின்றானா?

அதிலும் மோதிர அளவேயான பிரபஞ்சத்தில் 300 மில்லியனுக்கும் அதிகமான கெலக்ஸிகளில் ஒரு கெலக்ஸியில் அதிலுள்ள 250 பில்லியனுக்கும் அதிகமான நட்சத்திரங்களில் சூரியன் எனும் ஒரு சிறு நட்சத்திரத்தில் எட்டுக்கோள்களில் ஒன்றான பூமியில் 29% ஆன நிலப் பகுதியிலும் சிறு பகுதியில் வாழும் இந்த ஆறடி உயரமான மனிதர்களை மட்டும்தான் நிர்வகிக்கிறானா? அப்படித்தான் என்பதை ஏற்க மனம் நாடுவதில்லை. சர்வ வல்லமை பொருந்தியவன், மிகப் பெரியவன் அல்லாஹ் அதனை மட்டும்தான் நிர்வகிக்கின்றான் என்று சிந்திப்பது இறை வல்லமையைக் குறைத்து மதிப்பிடுவதுபோன்று தோன்றுகிறது. (நஊது பில்லாஹ்)

**பூமிக்கு அப்பால் பூமிகள்**

இத்தகையதொரு சிந்தனையில்தான் பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தைப் பார்த்து வியந்த இந்த விஞ்ஞான உலகம் கூட நீண்ட காலமாக மனிதன் மட்டுமல்லாமல் வேறு உயிர்களும் எமது பூமி மட்டுமல்லாது






வேறு பூமிகளும் இப்பிரபஞ்சத்தில் எங்காவதொரு மூலையில் இருக்கலாம் என்று நம்புகின்றது (Earths beyond the Earth). விண்வெளியில் எண்ணிலடங்கா நட்சத்திர சூரியன்கள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றைச் சுற்றியும் (எமது ஞாயிற்றுத் தொகுதி போன்று) பல இலட்சக்கணக்கான கோள்கள், உப கோள்கள் வலம் வருகின்றன. இவை ஏதாவதொன்றில் நிச்சயம் உயிரினங்கள் வாழ வேண்டும். அவை மனிதர்களை விட விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் அதி உயர் நிலையில் இருக்க முடியும் அல்லது காட்டுமிராண்டித்தனமான, முரட்டு சுபாவமுள்ள ஜீவராசிகளாகவும் இருக்க முடியும் என்று விஞ்ஞானம் நம்புகின்றது.

2009 ஆம் ஆண்டு அமெரிக்க வொஷிங்டன் பல்கலைக்கழகத்தில் நாசா விண்வெளி மையம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியபோது ''நவீன ஐன்ஸ்டீன்'' என அழைக்கப்படும் வானியல் மேதை ஸ்டீபன் ஹாக்கிங் உரையாற்றும்போது, ''விண்ணகத்தில் கோடான கோடி நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்கள் மத்தியில் நாம் மட்டும் தனிமையாய் இருக்கின்றோமா?'' என்று கேள்வி எழுப்பியிருந்தார். அவர் மேலும் உரையாற்றுகையில், ''பல காலமாக இவ்வினா பற்றி நான் மிகவும் ஆழமாக அலசி ஆராய்ந்து வந்துள்ளேன். சமீபத்திய கண்டுபிடிப்புக்கள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் யாவும் ஒரே முடிவிற்கு வருவதற்கு சாதகமாக அமைந்திருந்தன. இப்பிரமாண்டமான பிரபஞ்சத்தில் நாம் மட்டும் தனிமையில் இல்லை என்பதுவே அம்முடிவு. இருப்பினும், வேற்றுக் கிரகங்களில் உயிரினங்கள் வாழ்ந்தால் அவர்களின் சமிக்ஞைகளை இதுவரை ஏன் மனித இனம் கண்டறியவில்லை. எமது தொழில்நுட்பம் அவற்றை அறியும் ஆற்றல் அற்றனவா? வேற்றுக் கிரகவாசிகள் எங்களை விட அதி முன்னேற்றமடைந்தவர்களா? இவை இன்னும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய விடயங்கள்'' என்று குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை நம்பிக்கையே அற்ற இவர்கள் இவ்வாறு சிந்திக்கும்போது ரப்புல் ஆலமீன் - உலகங்களின் இரட்சகன் என அல்லாஹ்வை ஈமான் கொண்டிருக்கும் நாம் எவ்வாறு சிந்திக்க வேண்டும்? அவர்கள் சிந்திப்பதோடு நிற்கவில்லை விண்வெளி ஆய்வுகூடங்கள், செய்மதிகள் என பல்வேறு சாதனங்களை விண்ணில் ஏவி ஆராய்ச்சிகளில் ஈடுபடுகின்றனர். ஆனால், நாம் சிந்திப்பதைக் கூட நிறுத்தி விட்டோம்.

இதனை 14 ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கும் அல்குர்ஆனின் அற்புதத்தைப் பாருங்கள். ''ஏழு வானங்களையும் அதே தொகையான பூமிகளையும் அல்லாஹ்தான் சிருஷ்டித்தான்.'' *(65:12)* இவ்வசனம் எமது பூமி மட்டுமல்லாது எண்ணிலடங்காத பூமிகள் இப்பிரபஞ்சத்தில் இருப்பதைத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. அவற்றில் உயிரினங்கள் இருக்கின்றனவா என்ற ஆய்வுகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டிருக்கும் இதேவேளை உயிரினங்களும் இருக்கலாம் என்பது போன்று உரைக்கும் சில வசனங்களை இங்கு அவதானிக்க முடிகிறது.

''வானங்களிலும் பூமியிலுமுள்ளோர் அனைவரும், தங்கள் தேவைகளை அவனிடமே கேட்கின்றனர்.'' *(55:29)* ''வானங்களிலும் பூமியிலும் இருப்பவையும் இவற்றுக்கிடையில் இருப்பவையும் பூமியில் புதைந்து கிடப்பவையும் அவனுக்கே உரியன.'' *(20:6)* வானத்திற்கும் பூமிக்கும் இடையில் உள்ளவை பற்றி அல்லாஹ் பின்வரும் வசனங்களிலும் முக்கியப்படுத்திக் கூறுகின்றான்: *(32:4 50:38 21:16 44:7 44:38 78:37 15:85 46:3 48:4 48:7 43:85)* இத்திரு வசனங்கள் வானத்திற்கும் பூமிக்கும் இடையில் உள்ள கோள்கள், நட்சத்திரங்கள், விண்கற்கள் என்பவற்றோடு அங்கு உயிரினங்கள் இருக்கலாம் என்பதையும் சூசகமாகக் கூறுவதாகக் கொள்ளலாம்.

**பிரபஞ்சத்திற்கு அப்பால் பிரபஞ்சங்கள்**

இதுவரை எமது பிரபஞ்சத்தைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருந்த விஞ்ஞான உலகம் தற்போது ஒரு புதிய சிந்தனையை முன்வைத்துள்ளது. அது தான் பிரபஞ்சத்திற்கு அப்பால் பிரபஞ்சங்கள் "Universes beyond the Universe" ஆகும். அதாவது, இப்பிரபஞ்சத்தில் எமது பூமி மட்டுமல்ல, இன்னும் பூமி போன்ற பல கோள்கள் இருக்க வேண்டுமென்றும் மனிதர்கள் நாம் மட்டுமல்ல, எம்போன்ற இன்னும் ஜீவராசிகள் இருக்க வேண்டுமென்றும் கூறிவந்த விஞ்ஞானம், அதற்கு ஒரு படி மேலே சென்று அதாவது நாம் இருக்கும் இப்பிரபஞ்சம் மட்டுமல்ல, இதனையும் தாண்டி பல பிரபஞ்சங்கள் இருக்க வேண்டுமென நம்புகின்றது. இது தொடர்பான கருத்தை இத்தாலியைச் சேர்ந்த ஜியோர்டானோ புரூனே (கி.பி. 1548-1600) என்பவர் முதன் முதலில் முன்வைத்தார். ''கடவுளின் திறனாலும் நற்பண்பாலும் முடிவுள்ள உலகம் ஒன்றைத்தான் படைக்க முடியும் என்று நான் கருதவில்லை. அவனது வல்லமை எண்ணிலடங்காத பல உலகங்களைப் படைக்கக் கூடியது. ஆகவே, இது போன்று பல உலகங்கள் இருக்கின்றன'' என்றார். இக்கருத்து பைபிளுக்கு முரணாக இருந்தது என்பதால் கிறிஸ்தவ மடத்தின் எதிர்ப்புக்குள்ளான இவ் அறிஞர் கி.பி. 1600 இல் உயிரோடு நெருப்பில் கொளுத்தப்பட்டார்.

**அல்குர்ஆன்**

புரூனேயின் கருத்து பைபிளுக்கு முரணானது என்று அக்கால கிறிஸ்தவ பாதிரிகள் எண்ணினாலும் அது அல்குர்ஆனுக்கு முரணானது அல்ல என்றே நான் கருதுகின்றேன். ஆதம், ஹவ்வா, இப்லீஸ் ஆகிய மூவரையும் அல்லாஹ் இப்பிரபஞ்சத்திற்கு வெளியிலிருந்த சுவனத்திலிருந்து பிரபஞ்சத்திற்குள் இருக்கும் இப்பூமிக்கு இறக்கியதாலும் எமது ஆன்மாக்கள் கூட ஆலமுல் அர்வாஹ் எனும் உலகத்திலிருந்து இப்பூமியை வந்தடைவதாலும் ஒரு வகையில் இப்பிரபஞ்சம் தவிர்ந்த இன்னும் பிரபஞ்சங்கள் இருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. ஒரு வகையில் நாம் வேற்றுப் பிரபஞ்சவாசிகள்தாம். ரப்புல் ஆலமீன் என்ற சொல் அல்லாஹ் பல பிரபஞ்சங்களினதும் ரப் என்ற கருத்தைத் தருவதாகவும் உள்ளது. அல்லாஹ்வே அறிந்தவன்.

அல்லாஹ் பிரபஞ்சத்தைப் படைத்துவிட்டு மலக்குகளைப் பார்த்து ''இவற்றின் பெயர்களைக் கூறுங்கள்'' என்றபோது மலக்குகள், ''(இறைவா!) நீயே தூயவன். நீ எங்களுக்குக் கற்றுக் கொடுத்தவை தவிர எதைப் பற்றியும் எங்களுக்கு அறிவு இல்லை. நிச்சயமாக நீயே பேரறிவாளன், விவேகமிக்கவன்'' எனக் கூறினார்கள். *(2:32)* அப்படிப்பட்ட மலக்குகளிடம் அல்லாஹ் ''நான் மனிதர்களைப் படைக்கப் போகின்றேன்'' என்று கூறியபோது...

**19 ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரலாற்றில்

## நிராகரிப்பாளர்களுக்கு மத்தியில் உறுதியுடன் நின்ற பெண்

ரம்லா என்ற பெண் அபூ சுப்யானின் மகள். அபூ சுப்யான் ஆரம்பம் தொடுத்து நீண்ட காலமாக இஸ்லாத்திற்கு எதிராக நின்றவர். எனினும், ரம்லா குர்ரின் வீட்டினுள்ளிருந்தே மிகவும் ஆரம்ப காலத்தில் இஸ்லாத்தை ஏற்றார்.

இது அபூ சுப்யானுக்கும் பெரும் பிரச்சினையாகவும் இஸ்லாத்தை எதிர்க்கும் மக்காவின் தலைமைகளுக்கு முன்னால் அவமானமாகவும் போய்விட்டது. ரம்லாவை மாற்ற அபூ சுப்யான் எடுத்த முயற்சிகள்

எம்.ஏ. ரஹ்மான்

எதுவும் பயனளிக்கவில்லை. ரம்லா ஹப்ஷாவுக்கு ஹிஜ்ரத்தும் செய்கிறார். அங்கே அவருக்கு இன்னொரு சோதனை காத்திருந்தது. அவரது கணவன் உபைதுல்லா இப்னு ஜஹ்ஷ் கிறிஸ்தவ மதத்திற்கு மாறி விடுகிறார். இப்போது ரம்லாவுக்கு கணவனோடு வாழவும் முடியவில்லை; மீண்டும் மக்காவுக்கு திரும்பி குடும்பத்தோடு வாழவும் முடியாது. எனினும், ரம்லா உறுதியோடு இஸ்லாத்தில் நிலைக்கிறார்கள். அந்த ஹிஜ்ரத்தின் பூமியிலேயே வாழ்கிறார்கள். இத்தகைய சோதனைக்குட்பட்ட பெண்ணை இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மணமுடித்துக் கொண்டார்கள். புரட்சியாளர்கள் உஸ்மான் (ரழியல்லாஹு அன்ஹு) வீட்டைச் சூழ்ந்து தண்ணீர், உணவு போவதையும் தடுத்து விடுகிறார்கள். அப்போது தண்ணீரை எடுத்துக் கொண்டு புரட்சியாளர்களின் எதிர்ப்பைத் தாண்டி உஸ்மானிடம் செல்கிறார்.

**வீரப் பெண்மணி:** அப்துல் முத்தலிபின் மகள் ஸபிய்யா (ரழியல்லாஹு அன்ஹா) ஏறத்தாழ 60 வயதை எட்டியிருந்தும் உஹத் யுத்தப் படை பிரிவோடு சென்றார். காயப்பட்டோரை கவனித்துக் கொண்டும் தண்ணீர் கொடுத்துக் கொண்டும் இருந்தார். இறைத்தூதரை விட்டும் பலர் பின்வாங்குவதை அவதானித்த அவர் தோற்றுப் பின்வாங்கிய ஒருவனின் ஈட்டியைப் பறித்தெடுத்துக் கொண்டு ''முஸ்லிம்களே! இறைத்தூதரை விட்டுப் பின்வாங்கி ஓடுவதா?'' எனக் கேட்டுக் கொண்டே போராட முற்பட்டார். கந்தக் யுத்தத்தின்போது பெண்களையும் சிறு பிள்ளைகளையும் ஒரு கோட்டையில் வைத்துவிட்டு முஸ்லிம்கள் களத்திற்குச் சென்றிருந்தார்கள். பனூ குறையாக்களின் யூதனொருவன் கோட்டையை அவதானித்துக் கொண்டு சுற்றுவதை ஸபிய்யா அவதானித்தார். அவனையறியாமலேயே அவனை பின்தொடர்ந்த ஸபிய்யா திடீரென அவனைக் கொன்று தலையை வெட்டி யூதர்கள் பக்கமாக வீசியெறிந்தார். கோட்டைக்கு நல்ல பாதுகாப்புள்ளது எனக் கருதிய யூதர்கள் அப்பக்கமே அதன் பின்னர் வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நரகத்தின் பெயர்கள்

அல் ஆஹிரா (39 : 9)
பிஃஸல் கரார் (38 : 60)
பிஃஸல் மஸியிர் (2 : 126)
பிஃஸல் மிஹாத் (2 : 206)
பிஃஸல் விர்துல் மவ்ரூத் (11 : 98)
அல் ஹாபிரா (79 : 10)
தாருல் ஹில்த் (41 : 28)

மஹ்ரூப் றிஸ்பியா
சுமையா பெ.அ.க.

## முக்கியமான நாடுகளின் தேசிய சின்னங்கள்

- இலங்கை - வாளேந்திய சிங்கம்
- அவுஸ்திரேலியா - கங்காரு
- பங்களாதேஷ் - புலி
- அமெரிக்கா - தங்கத் தடி
- அயர்லாந்து - ஹப்ரக் மலர்
- டென்மார்க் - கடற்கரைச் செடி
- இந்தியா - சிங்கத்தின் தலை
- ஈரான் - ரோஜா மலர்
- ஈராக் - சிவப்பு ரோஜா
- எகிப்து - தாமரைப் பூ

**ஏ.என்.எம். நபீஸ்**
**சிலா/அல்ஹிரா மு.ம.வி.**
**கொட்டரமுல்லை**

## சுவாரஷ்யமான சில தகவல்கள்

துவர்ப்பு : உடலுக்குத் தேவையான ஆற்றலைத் தருகிறது.

கார்ப்பு : ஆற்றலை செயற்படுத்துகின்றது.

இனிப்பு : உடல் வளத்தை பாதுகாக்கின்றது.

உவர்ப்பு : உணர்ச்சி, தெளிவு நிலையை உண்டாக்குகின்றது.

கசப்பு : உடலை மென்மையாக வைத்திருக்கின்றது.

புளிப்பு : உடல் இளமை பெற இயங்குகிறது.

**அஹமட் ஆக்கிப் அவ்வாஹுன்**
**தி/ஸாஹிரா கல்லூரி**
**திருகோணமலை**

## மாகாணங்களுக்கு உரித்தான பூக்கள்

- வட மாகாணம்:
  காட்டு மல்லிகை (மல் பிச்ச மல)
- மேல் மாகாணம்:
  வெண்தாமரை (சுது நெலும் மல)
- வட மத்திய மாகாணம்:
  கொன்றைப்பூ (எஹல மல)
- ஊவா மாகாணம்:
  நரிவால் ஒர்கிட் (குருலு ராஜ மல)
- கிழக்கு மாகாணம்:
  விஷ மூங்கில் (கொட மா நெல் மல)
- தென் மாகாணம்:
  ஜின் போவிட்டியா மல
- மத்திய மாகாணம்:
  பில்லி மலர் (மஹரத் மல)
- சப்ரகமுவ மாகாணம்:
  வைகாசிப் பூ (வெசாக் மல)
- வட மேல் மாகாணம்:
  எட்டேரியா மல

**எம்.ஏ. பஹீமா**
**அம்மயன் குளம், சியம்பளாகஸ்கொட்டுவ**

## நினைவில் நிற்பவளே!

எழுத நினைக்கும்போது
சில வசந்தமான நினைவுகள்
மிக வேகமாக மின்னிச் செல்கின்றன...

மழலை மொழி பேசி
உன் மனதை வென்றெடுத்த
என் குழந்தைப் பருவம்

உன் கரம் செய்த பட்டம்
விண்ணில் பறக்க மண்ணில்
கைதட்டி குதித்த என்
பிள்ளைப் பருவம்

வெண்ணிற பட்டாம் பூச்சியாய்
சிறகடித்து கல்லூரி நாட்கள்
காண வைத்த உன் மலர் இதயம்

மொத்தமாக என்னை
முழுமைப்படுத்திய முதல் ரத்தினம்
நீயம்மா...

**ஏ.எப். அஸ்ரிபா**
**பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.**
**ஓட்டமாவடி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பணமும் பாட்டனாரும்

**அஸ்மா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களின் நடவடிக்கைகள் அனைத்தும் அறிவுபூர்வமாய் அமைந்திருந்தன. இதோ ஓர் எடுத்துக்காட்டு!**

அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் ஹிஜ்ரத்தின்போது வீட்டிலிருந்து பணம் முழுவதையும் எடுத்துச் சென்றிருந்தார்கள். எதற்காக? தம் குடும்பத்தினருக்கு எதுவும் கொடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல. மாறாக, முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம்) அவர்களுக்கு உதவ வேண்டும், அவர்கள் மேற் கொண்ட அழைப்புப் பணி உலகமெங்கும் பரவிட வேண்டும் என்பதற்காகத்தான். தம்மை விடவும் தம் குடும்பத்தை விடவும் உயர்வாய் கருதிக் கொண்டிருந்த ஏகத்துவப் பிரசாரத்தை வெற்றியடையச் செய்ய வேண்டும் எனும் உன்னத குறிக்கோளுக்காகத்தான் அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் இவ்வாறு செய்தார்கள்.

இந்த விஷயம் அவரது தந்தை அபூ குஹாஃபா வுக்குத் தெரிய வருகிறது. அவர் முதியவராகவும் கண் பார்வை இழந்தவராகவும் இருந்தார். அதுவரை அவர் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. மிகுந்த மனவேதனையுடனும் கோபத்துடனும் வந்து தம்முடைய பேத்தியான அஸ்மா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்களை நோக்கிக் கேட்டார்:

''அபூபக்ர் உங்களை மற்றொரு துன்பத்தில் ஆழ்த்தியுள்ளார். உங்களை தன்னந்தனியே விட்டு விட்டுச் சென்றது மட்டுமல்லாமல், தன்னுடைய பணம் முழுவதையும் உங்களுக்குத் தராமல் கொண்டு சென்று விட்டார்.''

''என் அன்புப் பாட்டனாரே! அப்படியல்ல'' என்று பதிலளித்த அஸ்மா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் முதியவராகவும் கண்பார்வையை இழந்தும் உள்ள தம் பாட்டனாரை இந்நேரத்தில் மனம் நோக வைப்பது நல்லதல்ல எனக் கருதி சிறுசிறு கற்களை கொஞ்சம் பொறுக்கி எடுத்து அவற்றை அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் பணம் வைத்திருந்த பணப் பையில் போட்டு அப்பையைப் பெட்டியில் போட்டு வைத்து விட்டார்கள்.

''இங்கு வந்து பாருங்களேன்!'' என்று கூறி பாட்டனாரின் கையைப் பிடித்து அழைத்துச் சென்று அந்தப் பையிலே அவர் கையை வைத்து ''இதென்னவென்று சொல்லுங்கள்'' என்றார்கள். அப்போது அபூகுஹாஃபா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மனம் நிம்மதியடைந்து ''இதனை உங்களுக்காக விட்டுச் சென்றுள்ளார். உங்களுக்கு நல்லதைத்தான் செய்துள்ளார்'' என்று கூறினார்கள்.


**எம்.ஜே.எப். ஸஹ்ரா**
**அல்பாஸியதுல் நஸ்ரியா மு.பா.ம.வி.**
**பேருவளை**


# தொகைநிலைப் பெயர்கள்

| | |
|---|---|
| இரு குரவர் | : தாய், தந்தை |
| இரு சுடர் | : சூரியன், சந்திரன் |
| முத்தமிழ் | : இயல், இசை, நாடகம் |
| மும்மலங்கள் | : ஆணவம், கன்மம், மாயை |
| முச்சுடர் | : சூரியன், சந்திரன், அக்கினி |
| நாற்பொருள் | : அறம், பொருள், இன்பம், வீடு |
| நால் வர்ணத்தார் | : பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் |
| ஐநிலம் | : குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| ஐம்பெருங் காப்பியம் | : சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி |
| ஆறறிவுகள் | : பார்வை, கேள்வி, முகர்தல், சுவைத்தல், தொடுகை, பகுத்தல் |


**என்.எப். அம்னா**
**மன்/பு/றிஷாத் பதியுதீன் ம.வி.**
**அல்காசிமி சிடி, பாலாவி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிந்திக்கச் சில வரிகள்



❖ வழக்கறிஞர்களின் தவறுகள் தூக்கில் தொங்கும்;
மருத்துவரின் தவறுகள் மண்ணில் புதையும்;
ஆசிரியர்களின் தவறுகளோ தெருவில் அலையும்...!

❖ வழக்கறிஞர்களிடம் உண்மையை மறைக்கக் கூடாது;
மருத்துவரிடம் நோயை மறைக்கக் கூடாது;
ஆசிரியரிடம் அறியாமையை மறைக்கக் கூடாது...!

❖ அன்பை அபகரிப்பதில் திருடனாய் இரு!
அறிவைப் பெருக்குவதில் பேராசைக்காரனாய் இரு!
முன்னேற முயற்சிப்பதில் பிடிவாதக்காரனாய் இரு!
கர்வம் கொள்வதில் கஞ்சனாய் இரு!
எதிர்ப்பை வெல்வதில் முரடனாய் இரு!

**ஏ.எஸ்.எப். றிஸ்லா**
**பொ/திம்பு/ சேனபுர அல் அமீன் மு.ம.வி.**

---

# நூல்களும் ஆசிரியர்களும்

| | |
|---|---|
| ஆத்திசூடி | - ஔவையார் |
| சிலப்பதிகாரம் | - இளங்கோவடிகள் |
| சீவகசிந்தாமணி | - திருத்தக்க தேவர் |
| சீறாப்புராணம் | - உமறுப்புலவர் |
| தொல்காப்பியம் | - தொல்காப்பியர் |
| பாஞ்சாலி சபதம் | - பாரதியார் |
| மணிமேகலை | - சீத்தலைச் சாத்தனார் |
| கீதாஞ்சலி | - ரவீந்திரநாத் தாகூர் |
| குண்டலகேசி | - நாத கூத்தனார் |
| இராமாயணம் | - வால்மீகி |
| குசேல உபாக்கியானம் | - வல்லூர் தேவராச பிள்ளை |

**எம்.என்.எம். மின்ஹாஜ்**
**அஸ்ஸிராஜ் ஆ.மு.வி.**
**தெல்லங்க**

---

# பேசாத மரணம்

என்ன இது
என்னென்னவோ செய்கின்றோம்
எவ்வளவு நாள் யோசிப்பதில்லையா
எது நம் இடம் எது சொந்த இடம்
அதைத்தானே நேசிக்க வேண்டும்

சுவர்க்கத்தை விரும்பும் நாம்
மரணத்தை விரும்புவதில்லை
முதல் படியில் காலடி வைத்தால்தான்
இரண்டாவதை அடைய
முடியும்! அது

ஒரு நொடி
ஒரு கணம்
ஓரிமைப் பொழுது
கண்மூடித் திறப்பதற்குள்
நிகழ்ந்து விடும்

ஓடினாலும் சரி
ஒதுங்கினாலும் சரி
ஒருநாள் உன்னை அடைய
காத்திருக்கும்

பேசாத மரணம் வருவதற்குள்
நல்பேச்சை பேசி
நாணயத்தையும் நல்லுறவுகளையும்
நன்மைகளையும் சம்பாதிப்போம்

**சே.மு. அஸ்மித்**
**தி/கிண்/தாருல் உலூம் ம.வி.**
**திருகோணமலை**

---

# பொன் மொழிகள்

- பணம் இருந்தால் உன்னை உனக்குத் தெரியாது. பணம் இல்லாவிட்டால் யாருக்கும் உன்னைத் தெரியாது.
- பணக்காரன் மகன் செலவாளி; செலவாளி மகன் கடனாளி; கடனாளி மகன் பொறுப்பாளி; பொறுப்பாளி மகன் பணக்காரன். எதுவும் நிரந்தரமில்லை.
- சோம்பல் அனைத்தையும் கடினமாக்கும். சுறுசுறுப்பு அனைத்தையும் எளிதாக்கும் - ஜப்பான்
- அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத் திறக்கும் - ஜோன் கீட்ஸ்
- உங்கள் பேச்சைக் கொண்டுதான் உங்கள் அன்பு மதிக்கப்படும். உங்கள் அன்பைப் போலத்தான் உங்கள் நடத்தை இருக்கும். உங்கள் நடத்தையைப் போலத்தான் இருக்கும் உங்கள் வாழ்க்கை. - சோக்ரடீஸ்

**ஏ.எஸ்.எப். றிஸ்லா**
**பொ/திம்பு/ சேனபுர அல்அமீன் மு.ம.வி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக் களஞ்சியம்



✍ ஏ.ஆர்.எம். ஜிப்ரி BEd, MEd

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் இடம்பெறும் அறிவுக் களஞ்சிய நிகழ்ச்சி வினாக்களின் தொகுப்பு

## முதல் சுற்று (இஸ்லாம் தொடர்பான வினாக்கள்)

1. 'கிதாபுல் இல்ம்' என்ற ஹதீஸ் கிரந்தத்தை இயற்றியவர் யார்?
2. இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட பல்வேறு அரசியல் நெருக்கடிகள், அரசியல் காரணிகளால் எதிரிகள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக பொய்யான முறையில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் அதாவது, புனைந்துரைக்கப்பட்ட ஹதீஸ்கள் அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
3. 'ஷமாயில்' என்ற ஹதீஸ் கிரந்தத்தை இயற்றியவர் யார்?
4. தொழுகையில் ஏற்படும் ஒரு சில தவறுகளுக்காகச் செய்யப்படும் மறதிக்கான சுஜூதே 'சஜ்தா சஹ்வு' எனப்படும். சஜ்தாவுடைய ஆயத்துக்கள் அல்குர்ஆனில் எத்தனை இடங்களில் வருகின்றன?
5. நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுடைய கருத்துக்களைத் தங்களுக்குச் சொந்தமான வார்த்தைகளிலேயே அறிவிக்கும் ஹதீஸின் வகை அரபியில் எவ்வாறு அழைக்கப்படும்?
6. ஜனாஸா தொழுகையின் பர்ளுகள் எத்தனை?
7. 'சபியுல்லாஹ்' (அல்லாஹுத்தஆலாவால் தெரிவு செய்யப்பட்டவர்) எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டவர் யார்?
8. விட்டு விட்டுத் தொழுவோருக்கும் பேணுதல் இல்லாமல் தொழுவோருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நரகம் எது?
9. கடைசியாக அல்குர்ஆன் முழுவதையும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு ஓதிக் காட்டியபோது அன்னவர்களுடன் இருந்தவர் யார்?
10. அல் அஸ்ஹர் பல்கலைக்கழகம், நிஸாமியா பல்கலைக்கழகம் என்பன இஸ்லாமிய உலகில் உன்னத நிலைபெற்ற பல்கலைக்கழகங்களாகும். கஅல் அஸ்ஹர் பல்கலைக்கழகம் எந்த நாட்டில் உள்ளது?

## இரண்டாம் சுற்று (பொது அறிவு)

1. 2002 இல் நேபாளத்தில் நடைபெற்ற 'சார்க்' உச்சி மாநாடு எத்தனையாவது 'சார்க்' உச்சி மாநாடாகும்?
2. லொக்கபீ விமானத் தாக்குதலுக்குக் காரணமாக இருந்தவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆயுட்காலச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள லிபியப் பிரஜையின் பெயர் என்ன?
3. 16.01.1987 இல் 'சார்க்' செயலகம் நிறுவப்பட்டது. அது எந்த நகரில் அமைந்துள்ளது?
4. D.B.S. என்ற 3 எழுத்துக்களால் உலகம் முழுவதும் போற்றப்பட்ட அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர் யார்?
5. இருபது வருடங்களுக்கு மேலாகத் தனது தலைமைப் பொறுப்பைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் றோபேர்ட் முகாபே எந்த நாட்டின் தலைவராவார்?
6. கொழும்பு-இரத்தினபுரி-மட்டக்களப்பு நெடுஞ்சாலையே இலங்கையில் மிக நீளமான பெருந்தெருவாகும். இதன் குறியீடு யாது?
7. நோர்வேஜியன் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு என்ன சுருக்கப் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
8. நேட்டோ என்பதன் விரிவான பெயர் யாது?
9. E-mail என்பதன் முழுப் பெயர் என்ன?
10. 'உளவியலின் தந்தை' சிக்மன் பிராய்ட் ஆவார். 'மருத்துவத்தின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?
11. PLO என்பதன் விரிவான பெயர் என்ன?
12. இலங்கை ரூபாவாஹினிக் கூட்டுத்தாபனம் 1982 இல் தனது சேவையை ஆரம்பித்தபோது அதன் முதலாவது தலைவராகப் பதவி வகித்தவர் 2002 மார்ச்சில் காலமானார். அன்னாரின் பெயர் என்ன?

விடைகள் 19 ஆம் பக்கம் பார்க்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ஷெய்க் யூ.எல்.எம். ரிஸ்மி (நளீமி BA)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

# اَلْحَيَوَانَاتُ

هَذَا فَلاَّحٌ، وَهَذِهِ مَزْرَعَتُهُ، هَذَا الْفَلاَّحُ عِنْدَهُ جَمَلٌ وَجَامُوْسٌ وَبَقَرَةٌ وَثَوْرٌ، وَهَذِهِ حَيَوَانَاتٌ كَبِيْرَةٌ، وَعِنْدَهُ حِمَارٌ، وَالْحِمَارُ حَيَوَانٌ مُتَوَسِّطٌ، وَعِنْدَهُ شَاةٌ وَخَرُوْفٌ، وَهَذَانِ حَيْوَانَانِ صَغِيْرَانِ، وَعِنْدَهُ أَرْنَبٌ، وَقِطٌّ وَعِنْدَهُ دَجَاجَةٌ وَحَمَامٌ، الْحَمَامُ طَائِرٌ مُتَوَسِّطٌ.

| | |
|---|---|
| هَلِ الْجَمَلُ حَيَوَانٌ كَبِيْرٌ؟ | لاَ، بَلْ هُوَ حَيَوَانٌ مَاكِرٌ |
| هَلِ الْبَقَرَةُ حَيَوَانٌ كَبِيْرٌ؟ | لاَ، بَلْ هُوَ حَيَوَانٌ ضَعِيْفٌ |
| هَلِ الْخَرُوْفُ حَيَوَانٌ مُتَوَسِّطٌ ؟ | نَعَمْ، هُوَ حَيَوَانٌ جَمِيْلٌ |
| هَلِ الْحَمَامُ طَائِرٌ صَغِيْرٌ ؟ | لاَ، بَلْ هُوَ حَيَوَانٌ قَوِيٌّ |
| هَلِ الطَّاوُوْسُ طَائِرٌ جَمِيْلٌ ؟ | نَعَمْ، الْأَسَدُ حَيَوَانٌ قَوِيٌّ |
| هَلِ الْغُرَابُ طَائِرٌ جَمِيْلٌ ؟ | لاَ، بَلْ هُوَ طَائِرٌ قَبِيْحٌ |
| هَلِ الْأَسَدُ حَيَوَانٌ قَوِيٌّ ؟ | نَعَمْ، هُوَ طَائِرٌ جَمِيْلٌ |
| هَلِ الْفِيْلُ حَيَوَانٌ ضَعِيْفٌ ؟ | لاَ، بَلِ الْحَمَامُ حَيَوَانٌ مُتَوَسِّطٌ |
| هَلِ الْحِصَانُ حَيَوَانٌ جَمِيْلٌ ؟ | لاَ، بَلِ الْخَرُوْفُ حَيَوَانٌ صَغِيْر |
| هَلِ الْأَرْنَبُ حَيَوَانٌ قَوِيٌّ ؟ | نَعَمْ، الْبَقَرَةُ حَيَوَانٌ كَبِيْر |
| هَلِ الثَّعْلَبُ حَيَوَانٌ شَرِيْفٌ ؟ | نَعَمْ، الْجَمَلُ حَيَوَانٌ كَبِيْرٌ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# اَلرِّسَالَةُ

فَاطِمَةُ تَقُوْلُ : هَذِهِ رِسَالَةُ أَخِيْ خَالِدٍ، أَفْتَحُ الظَّرْفَ، وَأَقْرَأُ الرِّسَالَةَ، ثُمَّ آخُذُ الْقَلَمَ وَالْوَرَقَ، وَأَكْتُبُ الْجَوَابَ، وَأَكْتُبُ الرِّسَالَةَ إِلَى أَخِيْ، وَأَضَعُهَا فِيْ الظَّرْفِ، ثُمَّ أُغْلِقُ الظَّرْفَ، وَأَكْتُبُ عَلَيْهِ الْعُنْوَانَ، ثُمَّ أَقُوْلُ لِأَخِيْ مَحْمُوْدٍ، خُذْ هَذِهِ الرِّسَالَةَ وَضَعْهَا فِيْ صُنْدُوْقِ الْبَرِيْدِ

| مُعَلِّمَةٌ | تِلْمِيْذَةٌ |
|---|---|
| مَا تِلْكَ بِيَدِكِ يَا فَاطِمَةُ ؟ | أُرْسِلُهَا إِلَى صُنْدُوْقِ الْبَرِيْدِ |
| اِفْتَحِيْ الظَّرْفَ وَاقْرَئِيْ الرِّسَالَةَ | أُغْلِقُ الظَّرْفَ |
| مَاذَا يَقُوْلُ أَخُوْكِ ؟ | أَضَعُ الرِّسَالَةَ فِيْ الظَّرْفِ |
| خُذِيْ الْقَلَمَ وَالْوَرَقَ | أَكْتُبُ الْجَوَابَ إِلَى أَخِيْ |
| أُكْتُبِيْ الْجَوَابَ إِلَى أَخِيْكِ | آخُذُ الْقَلَمَ وَالْوَرَقَ |
| ضَعِيْ الرِّسَالَةَ فِيْ الظَّرْفِ | أَخِيْ يَقُوْلُ : أَنَا بِخَيْرٍ وَادْعُوْلَكِ |
| أَغْلِقِيْ الظَّرْفَ | أَفْتَحُ الظَّرْفَ وَأَقْرَأُ رِسَالَةَ |
| أَيْنَ تُرْسِلِيْنَ الرِّسَالَةَ ؟ | هَذِهِ رِسَالَةُ أَخِيْ |


زَيْنَبُ تَقُوْلُ: فَاطِمَةُ تَفْتَحُ الظَّرْفَ وَتَقْرَأُ الرِّسَالَةَ، ثُمَّ تَأْخُذُ الْقَلَمَ وَالْوَرَقَ وَتَكْتُبُ الرِّسَالَةَ إِلَى أَخِيْهَا، ثُمَّ تَضَعُ الرِّسَالَةَ فِيْ الظَّرْفِ،وَتَكْتُبُ عَلَيْهِ الْعُنْوَانَ، ثُمَّ تَقُوْلُ لِأَخِيْهَا مَحْمُوْدٍ: خُذِ الرِّسَالَةَ وَضَعْهَا فِيْ صُنْدُوْقِ الْبَرِيْدِ.

## اُكْمِلِ الْفِقْرَةِ

أَنْتِ يَا فَاطِمَةُ! تَفْتَحِيْنَ الظَّرْفَ، وَتَقْرَئِيْنَ الرِّسَالَةَ ثُمَّ ...............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Miss. Aysha Hassan

## Assalamu alaikum dear friends,

Happy to meet all of you after a long, long vacation… I hope all of you would have enjoyed the vacation in various ways. Now, time to be serious. You all have stepped into a new academic year; you, all have been promoted to a higher grade. This means you have grown up and have to be more serious in studies. I think all of you would have made certain plans as to how to make the new academic year fruitful.

***Here are some of my tips for you to add into your list***

- ✓ I will study hard this year and make my parents feel proud about me
- ✓ I will not engage in useless talks and backbiting
- ✓ I will save some money from my pocket money
- ✓ I will spend more time with my parents and grandparents
- ✓ I will pray Sunna prayers as well, along with the Farl prayers
- ✓ I will improve my English
- ✓ I will keep my room and home clean
- ✓ I will never hurt anyone
- ✓ I will try to learn something new every day
- ✓ I will make new friends only for Allah's sake

So friends, try to follow at least some, from my tips above. I am sure that you will strictly follow what you have planned.

And remember friends, we celebrate the new-year on the first of Muharram. January first is only a beginning of a new academic year for all of us.

No matter how much marks you have scored in the previous year, no matter how much naughty you were in the previous year, be firm that this year 'I will prove others wrong regarding me'. Seal the dead past and step for-ward, you have a very long journey to go to achieve success in both the lives






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Hadith of the month

"The Prophet (Sallallahu 'Alaihi WaSallam) said, "On the Day when all mankind will stand before the Lord of the Worlds, some of them will be enveloped in their sweat up to the middle of their ears."

# Queen of Islam



**The** power you have
Is truly amazing
You are a beautiful so beautiful one.
Your modesty is nobler than the full moon
Your compassion is more beneficial than the rain
Your moral is more sublime than the musk.
Think not you are nothing
But you are everything
You are most precious and a treasure than a jewel.
Preserve your beauty and your chastity
Oh! My dear sister!
"Hijab" is your shield which makes you lead
It's not shameful but it's graceful Sister,
Pursue your journey along
the garden of paradise
That lasts for an eternity because,
You're a queen of Islam

***S. Silma Marzook***
***China Fort, Beruwala.***

## *Laugh* a while:

Teacher: "eating spinach adds Colour to your cheeks!"

Student: Yuck!!! I don't won't green cheeks!!!

Your Corner

# Tips to make your life perfect

- It is impossible to fail in many ways while to succeed is possible in only one way.
- Nothing is impossible, every thing is possible.
- Trust is the gate way to your life.
- "can't "is the slogan of foolishness.
- Be perfect in your work every day.
- No one is trust worthy around you, because every one may be traitors.
- Always believe in yourself.
- Don't believe any one in short period.
- Don't talk too much but think more.
- Try to live without depending on others.
- 3 solutions for every problem, accept it, change it or leave it.


***Touch the fire, enjoy your life and be a lucky guy!***

*Master: A.W. MazoonAhamed*
*2014(o/l batch)*
*BT/BC/Oddamavadi Central College*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The job I like the most



I would like to be a doctor. It is the noblest profession of the world. If I become a doctor I will be able to serve the general public well. Becoming a doctor is not an easy task. We have to score high marks at the GCE (A/L) examination in the stream of Bio – science. The duration of the course is five or six years. Today there is a great completion in our country to enter the medical faculty. There for, we have to study hard to reach the goal.

As a doctor I will have to spend most of my time with patients. Thousands of patients would come to meet me. I have to be tolerant. I have to be kind hearted all the time; medicine is not only a treatment. Doctors should speak with patients using kind words. Being a doctor is more of a service than a profession. A doctor is respected by all. That is why I like to become a doctor.

**MNF Nuha**
**Grade 11**
**NK/Pannawa Muslim Central College**
**Pannawa, Kobeigane.**

**FathimaAfraSanoon**
**Grade 5 – C**
**Al – Minaravidhyalaya**
**Balangoda**



## Early morning

Early in the morning
Out came the sun
Smiling and shining
For everyone.
Wake up children!
Come and have fun!
Lazy little girls and boys!
Will have nons!

I'm eagerly waiting for your contributions with comments, stories, poems and essays. The best ones will be published insha Allah.
So write to me at

**I learn every day**

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்ணூறு முறை முயற்சித்தால்...

நான் இளைஞனாக இருந்தபோது பத்து காரியங்கள் செய்தால் அதில் ஒன்பது தோல்வி அடைவதைப் பார்த்தேன். என்னுடைய வாழ்க்கையில் தோல்வி அடைவதை நான் விரும்பவில்லை. ஒன்பது தடவை வெற்றி பெற என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தபோது, எனக்கு ஓர் உண்மை பளிச்சென்று விளங்கியது. தொண்ணூறு முறை முயன்றால் ஒன்பது தடவை வெற்றி கிடைக்கும் என்பதுதான் அது. ஆகவே, முயற்சிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டேன். - பெர்னாட்ஷா

---

**08 ஆம் பக்கத் தொடர்...**

''(நபியே) இன்னும், உம் இறைவன் வானவர்களை நோக்கி நிச்சயமாக 'நான் பூமியில் ஒரு பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்' என்று கூறியபோது, அவர்கள் '(இறைவா!) நீ அதில் குழப்பத்தை உண்டாக்கி, இரத்தம் சிந்துவோரையா அமைக்கப் போகிறாய்? இன்னும் நாங்களோ உன் புகழ் ஓதியவர்களாக உன்னைத் துதித்து, உன் பரிசுத்தத்தைப் போற்றியவர்களாக இருக்கின் றோம்' என்று கூறினார்கள்? அ(தற்கு இறை)வன் 'நீங்கள் அறியாதவற்றையெல்லாம் நிச்சயமாக நான் அறிவேன்' எனக் கூறினான்.'' *(2:30)*

இங்கு மனிதர்கள் படைக்கப்பட முன்பே மலக்கு களுக்கு மனிதர்களின் பண்பு தெரிந்திருக்கின்றது. அவர்கள் இரத்தம் சிந்தி பூமியில் குழப்பம் செய்பவர்களென்ற முன் அனுபவம் மலக்கு களுக்கு இருந்திருக்கின்றது. அப்படியானால் அல்லாஹ் எம்மைப் போன்றோ அல்லது வேறு அமைப்பிலோ இதற்கு முன்பு உயிரினங்களைப் படைத்திருக்க வேண்டும். அது பற்றிய முன் அனுபவம் இருப்பதால் மலக்குகள் இம்முறை அல்லாஹ்விடம் இவ்வாறு கூறியிருக்க வேண்டும்.

**இறுதியாக...**

ஆக, இந்த விடங்களை வைத்துப் பார்க்கும் போது எனது சிந்தனையில் பட்ட ஒரு விடயத்தை சுருக்கமாகக் கூறுகின்றேன். சில சிந்தனைகளும் கேள்விகளும்தான் பல ஆய்வுகளுக்கும் கண்டு பிடிப்புகளுக்கும் அடிப்படையாக இருந்துள்ளன. அர்ஷ் உடனும் குர்ஷ் உடனும் ஒப்பிடும்போது மோதிரத்தை விட சிறிதான இப்பிரபஞ்சம் தவிர்ந்த நிறையப் பிரபஞ்சங்களை அல்லாஹ் அர்ஷை சூழ படைத்து வைத்திருக்கின்றான், அல்ஹம்து லில்லாஹ். நாமும் சிந்தித்து செயற்படுவோம்.

---

**அறிவுக் களஞ்சியம்...**

**13 ஆம் பக்கத் தொடர்...** **விடைகள் (இஸ்லாம்)**

1. இமாம் முஸ்லிம் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்
2. ஹதீதுல் மவ்ழூஉ
3. இமாம் திர்மிதி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள்
4. 15 5. ஹதீதுன் நபவிய்யா
6. 7
7. நபி ஆதம் (அலைஹிஸ்ஸலாம்)
8. ஜஹன்னதுல் வைல்
9. ஹஸரத் ஸெயித் இப்னு தாபித் (ரழியல்லாஹு அன்ஹு)
10. எகிப்து

**பொது அறிவு**

1. 11 ஆவது
2. அப்துல் பாஸித் அலி
3. கத்மண்டு நகரில்
4. ஜோர்ஜ் போர்னாட் ஷா
5. சிம்பாப்வே 6. A4
7. றெட்பானா
8. வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகள்
9. Electronic Mail 10. ஹிப்போ கிரட்டிஸ்
11. பலஸ்தீன விடுதலை இயக்கம்
12. எம்.ஜே. பெரேரா

---

## எண்ணங்களின் வண்ணங்கள் - 17

**தலைப்பு: நீர் வளத்தைப் பாதுகாப்போம்**

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 டிசம்பர் 20**

- உங்களது சித்திரம் A4 தாள் அளவில் அமைதல் வேண்டும்.
- சித்திரங்களுக்கு பயன்படுத்தும் வர்ணம் 'சோக் கலர்' ஆக இருத்தல் வேண்டும்.
- சிறந்த மூன்று படைப்புகளுக்கு பெறுமதியான புத்தகம் வழங்கப்படுவ துடன் பாராட்டைப் பெறும் சித்திரங்களும் அகரத்தில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம்சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களின் பங்களிப்புக்கள்

தொடர் - 14

## போர்த்துக்கேயர் காலப் பிரிவில் முஸ்லிம்கள்


அஷ்ஷெய்க் எம். நவாஸ் சனூர்டீன் (நளீமி MA)
உதவி அதிபர்
க/அல்மனார் தே.பா. ஹந்ததெஸ்ஸ
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்

16 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் உள்நாட்டு வணிகத்தில் முஸ்லிம்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. முக்கிய துறைமுக நகர்களான புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, கொட்டியாரம் ஆகிய இடங்களில் இருந்து மத்திய மலைநாட்டு பிரதேசங்களுக்கு இறக்குமதிப் பொருட்களை முஸ்லிம்களே கொண்டு சென்றனர். இதற்கு பொதி சுமக்கும் மாடுகளைப் பயன்படுத்தினர். இது தவளம் எனப்பட்டது. முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திய இவ்வணிக தொடர்பாடல் முறை அன்றைய சூழ்நிலையில் உள்நாட்டு வணிகத்தில் முக்கிய பங்கு வகித்தது.

கி.பி. 1626 ஆம் ஆண்டு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் சோதனை மிக்க ஆண்டாக அமைந்தது. அப்போது போர்த்துக்கேய தளபதியாக இருந்த கொன்ஸ்டைன்டின் டி சொய்ஸா டி நொரன்ஹா போர்த்துக்கேய மன்னர் முஸ்லிம்களை போர்த்துக்கேயர் ஆளுகைப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று ஏற்கனவே பிறப்பித்திருந்த கட்டளையை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தார். எனவே, 1626 இல் முஸ்லிம்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு வெளியேறியவர்களில் சிலர் இந்தியாவுக்கு சென்றனர். இன்னும் ஒரு பகுதியினர் கண்டி இராச்சியத்துக்கு புலம் பெயர்ந்தனர்.

முஸ்லிம்களை வெளியேற்றும் கொள்கை மிகக் கடுமையாக கடைப்பிடிக்கப்பட்ட போதிலும் காலி, மாத்தறை, அளுத்கம, களுத்துறை முதலிய பிரதேசங்களில் கணிசமான முஸ்லிம்கள் வாழ்ந்தனர். அவர்களை முழுமையாக ஒதுக்கி வாழ்வது போர்த்துக்கேயருக்கு இயலுமானதாக இருக்கவில்லை. வரலாற்றாசிரியர் குவ்ரோஸ் போர்த்துக்கேயருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே நிலவிய நல்லுறவு பற்றிய குறிப்பொன்றையும் தருகிறார். கொழும்பில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் பிரமுகரின் மகளின் திருமண விழாவில் போர்த்துக்கேய தளபதி உட்பட உயர் அதிகாரிகள் பங்கேற்ற தோடு திருமண வீட்டின் அலங்காரப் பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிடுகிறார். இது போர்த்துக்கேயர் முஸ்லிம்கள் தொடர்பில் பின்பற்றிய நெகிழ்வுத்தன்மைக்கு சான்றாக அமைகின்றது. தமது நலன்களுக்கு சாதகமாக அமையுமிடத்து முஸ்லிம்களோடு அவர்கள் இணக்கமாக நடந்து கொண்டுள்ளனர். மேற்குறித்த நிகழ்வு பற்றிய குவ்ரோஸின் குறிப்பை உன்னிப்பாக நோக்கும்போது பெலாலா என்ற பெயரை உடைய மேற்குறித்த முஸ்லிம் பிரமுகர் சற்றும் தலைசாய்க்காத துணிச்சல் உள்ள போர்த்துக்கேய அதிகாரிகளே மதித்து நடக்கும் பண்பு கொண்டவராக இருந்திருக்க வேண்டும் என்பதை உணர முடிகின்றது.

போர்த்துக்கேயர் முஸ்லிம்களோடு நெருக்கமாக இருந்தமைக்கு அன்றைய வணிக உலகில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்கள் தவிர்க்க முடியாதவர்களாக இருந்தமையே பிரதான காரணம் என கலாநிதி லோனா தேவராலு குறிப்பிடுகிறார். போர்த்துக் கேய கப்பல்கள் மிக வலிமையானவையாகவும் ஆயுதபலம் மிக்கவையாகவும் இருந்த போதிலும் கூட, முஸ்லிம்களே இந்து சமுத்திரத்தில் வலிமை படைத்தவர்களாக விளங்கினர். அவ்வாறே பருவக் காற்றுகள், அவற்றின் போக்குகள், கடற்கரையோரங்கள், கரையோர தங்குமிடங்கள் பற்றிய அறிவும் முஸ்லிம்களிடமே இருந்தது. கடற் பயணங்களில் ஆழ்ந்த அனுபவம் மிக்கவர்களாக விளங்கினர். கடலில் சரியான திசையறிந்து கலங்களைச் செலுத்துவதில் அதீத அறிவுள்ளவர்களாக இருந்தனர். இக்காரணங்களே போர்த்துக்கேயர் முஸ்லிம்களை தவிர்த்து நடக்க முடியாமல் போனமைக்கான பிரதான காரணிகளாக அமைந்தன. கலாநிதி எச்.எப். ஹொரனி தரும் இத்தகவல்களை போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் குவ்ரோஸ் பின்வருமாறு உறுதிப்படுத்துகிறார். ''இலங்கையைப் பொறுத்தவரையில் சுதேசிகளாக இருந்த சிங்களவர்கள் கடற் பயண அனுபவமோ, கடலோடும் திறனோ, கடல் வணிகம் பற்றிய அறிவோ அற்றவர்களாகவே இருந்தனர். எனவே, இவற்றுக்காக முஸ்லிம்களையே நம்ப வேண்டி இருந்தது. எனவே, அவர்களில் ஒரு பிரிவினரை இங்கு வாழவிட வேண்டிய தேவை ஏற்பட்டது. இந்த நோக்கத்துக்காக கிழக்குலகின் பல பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம்களோடு தமது கடுமையான போக்கை தளர்த்தி நடந்து கொள்ள வேண்டிய நிலை போர்த்துக்கேயருக்கு ஏற்பட்டது.

இலங்கையின் கரையோரத்தில் இருந்த முஸ்லிம்கள் எல்லோரையும் வெளியேற்றாமைக்கு இன்னொரு காரணமும் இருந்ததாக குவ்ரோஸ் குறிப்பிடுகிறார். இலங்கையின் துறைமுக நகர்களான காலி, மாத்தறை, அளுத்கம, நீர்கொழும்பு போன்ற இடங்களில் வாழ்ந்த முஸ்லிம்களை அதே இடங்களில் வாழவிட வேண்டுமென அங்கிருந்த சிங்களவர்கள் வேண்டிக் கொண்டனர். இந்தக் கோரிக்கையை மீற முடியாத நிலை இப்பிர தேசங்களைப் பொறுத்தவரையில் போர்த்துக் கேயருக்கு இருந்தது. எனவே, அவர்கள் சுதேசி களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தனர்.



போர்த்துக்கேயர் காலப் பிரிவில் முஸ்லிம்களின் வரலாற்று வகிபாகம் பற்றிய மிகச் சரியான கணிப்பைப் பெறுவதற்கு அவர்கள் இங்கிருந்து 150 வருட ஆட்சியையும் மொத்தமாக நோக்குதல் அவசியமாகும். அந்த வகையில் பார்க்கும்போது காலத்துக்குக் காலம் போர்த்துக்கேயர் முஸ்லிம் களைப் பொறுத்தவரையில் வித்தியாசமான கொள்கை களைக் கடைப்பிடித்தாலும் முஸ்லிம்கள் மீதான வெறுப்பும் காழ்ப்புணர்வுமே மேலோங்கியிருந்தன. எப்போதும் அவர்கள் முஸ்லிம்களை தமது எதிரி களாக பார்க்கும் பண்பையே கடைப்பிடித்தனர். முஸ்லிம்களை மத மாற்றம் செய்ய அவர்கள் எடுத்த எந்த ஒரு முயற்சியும் வெற்றி பெறவில்லை. இதுவே 1576 ஆம் ஆண்டு போர்த்துக்கேய ஆட்சியின் கீழ் இருந்த வணக்கஸ்தலங்களை அழிப்பதற்கான பிரதான காரணமாகியது. தொழுகைக்கான அழைப் பில் ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது பெயர் கூறுவதும் தடைசெய்யப்பட்டது.

போர்த்துக்கேயர் முஸ்லிம்களுக்கு இழைத்த இன்னல்களின் அதி உயர் நிலையாக 1640 ஆம் ஆண்டு நடைபெற்ற ''மாத்தறைப் படுகொலை'' அமைந்தது. முஸ்லிம்கள் ஒல்லாந்தருக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் போர்த்துக்கேய தளபதி அன்டொனியோ டி அம்ரொட் மாத்தறைக் கடை வீதியை தாக்கி சகல முஸ்லிம் ஆண்களையும் கொலை செய்யுமாறும் சொத்துக்களை பறிமுதல் செய்யுமாறும் கட்டளையிட்டான். 300 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டதோடு பெண்களும் சிறுவர்களும் சிறைக் கைதிகளாக கொழும்புக்கு அனுப்பப்பட்டனர். சுருங்கக் கூறின், போர்த்துக்கேயர் காலப் பிரிவு முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் நிம்மதியற்ற இருள் சூழ்ந்த காலப் பிரிவாகவே அமைந்திருந்தது. அதில் அவர்கள் பெற்ற இலாபங்களை விட துன்பமும் துயரமுமே அதிகமானவை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வருந்திய உள்ளம்



சர்மிலா ஏ. றாஸிக்
காத்தான்குடி - 05

''இஸாம்... இஸாம்... பாட்டிக்கு கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாங்க''

என்று தளர்வான குரலின் சத்தம் அந்த வீட்டின் ஓர் அறையில் கேட்டது.

''என்ன பாட்டி... நீங்க ஒரே என்னையே வேலைக்குச் சொல்வீங்களா? நான் விளையாடிக் கொண்டு இருப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறீங்க. நீங்களே போய் எடுத்துக் குடிங்க...''

என்று ஒரு பதிலும் கேட்டது. இது அந்த வீட்டின் புதிய நிகழ்வல்ல... வழமையானதேயாகும்.

இஸாமின் பெற்றோர் அரசாங்க ஊழியர்கள். தனது ஒரே மகனான இஸாமுக்கு தேவை எதுவாக இருப்பினும் உடனே அதை செய்வார்கள். வீட்டின் செல்லப் பிள்ளையான இஸாம் பாடசாலையில் தரம் 9 இல் கல்வி கற்கிறார். பாடசாலை விட்டு வீடு திரும்பியவுடன் பகல் உணவை உண்டுவிட்டு கூடைப்பந்து விளையாடுவது வழமை. தனது முற்றத்தில் ஆனந்தமாக மாலைப் பொழுதைக் கழிப்பான் இஸாம். எனினும், தனது வீட்டில் இருக்கும் தனது உம்மாவின் தாயாரான பாட்டியை அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. வயதான பாட்டிக்கு அன்பு காட்டவோ, உதவி செய்யவோ விரும்பாதவன் இஸாம்.

ஆனால், பாட்டி இஸாம் விளையாடும்போது தனது அறையின் ஜன்னலோரமாக பார்த்து மகிழ்வார். அவனோடு விளையாட முடியாத தனது முதுமை நிலையை, இயலாமையை எண்ணி மனம் வருந்துவார். தனது பேரனை அவனது பெற்றோர் வேலை முடிந்து வீடு வரும் வரை பாதுகாப்பவரும் அவரேதான். தனக்கு தேவைப்படும் சிறிய உதவிகளை பேரனிடம் கேட்கும்போது அவன் முகம் சுளிப்பதை அவர் என்றும் கோபமாக எண்ணியதில்லை.

''என் பேரன் இன்னும் சின்னப் பிள்ளைதான்!''

என்று தனக்குத் தானே ஆறுதல் கூறிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி அத்தேவையை பூர்த்தி செய்வார்.

அன்று மிக அழகான காலைப்பொழுது பளிச்சிட்டது. இஸாமின் பெற்றோர் வழமை போல தனது பணிக்காக சென்று விட்டார்கள். பாடசாலையில் இருந்து சற்று நேரத்தோடு வந்த இஸாம் பகல் உணவை முடித்து விட்டு முற்றத்தின் பக்கம் விரைந்தான். அப்போது தனது பாட்டி மாத்திரையை எடுத்துத் தரக் கேட்டும் அதற்கு ஒரு சாட்டுக் கூறி விட்டு அங்கிருந்து வெளியேறி விட்டான். வழமையான பதில்தான் இப்போதும் என்று உணர்ந்த இஸாமின் பாட்டி மெதுவாக சென்று எடுத்து உண்டவராக தனது கட்டிலில் சாய்ந்து கொண்டு இஸாமை நோக்கினார்.

சிறிது நேரம் கழிந்தது. ''ஓ... உம்மா... பாட்டி...'' என்று ஓர் அலறல் சத்தம் பாட்டியின் காதை தொட்டது. கட்டிலில் இருந்து அவசரமாக கூட எழும்ப முடியாத பாட்டி தனது முழுப் பலத்தையும் ஒன்றுதிரட்டி தனது கால்களை வேகமாக நகர்த்தியவராக இஸாமின் பக்கம் விரைந்தார். விளையாடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டிருந்த இஸாம் பக்கத்தில் இருந்த பெரிய மரக்குற்றியின் மீது விழுந்து காலை உடைத்தவனாக இரத்த வெள்ளத்தில் அழுது கொண்டிருந்தான்.

தள்ளாடிச் சென்ற இஸாமின் பாட்டியோ அவனை கட்டியணைத்து அவனுக்கு தைரியமூட்டி உடைந்த காலை நேராக வளைத்து தனது பிடவையின் ஓரத்தை கிழித்து கட்டினார். தனது பக்கத்து வீட்டாரைக் கூவி அழைத்து இஸாமை மிக அவசரமாக வைத்தியாசாலைக்கு அனுப்பினார். சிகிச்சை மிக அவசரமாக இஸாமிற்கு வழங்கப்பட்டு காலுக்கு கட்டும் போடப்பட்டது. சிறிது நேரத்தின் பின் இஸாம் கண் விழித்தான். அங்கு அவனருகில் அவன் பெற்றோருடன் பாட்டியும் ஓரமாக நிற்பதைக் கண்டான். உடனே தனது பாட்டியை கைநீட்டி அழைத்து அவரின் தோளில் சாய்ந்து தேம்பி தேம்பி அழுதான்.

''என் உம்மா, வாப்பா எவ்வளவு சொல்லியும் நான் உங்களோடு பாசமாக, உதவியாக, ஆதரவாக இருந்ததில்லை. பாட்டி நான் எனக்கு ஆபத்து என்று அழைத்தபோது உடனே என்னை வந்து பாதுகாத்தீங்க. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இனிமேல் நான் எப்போதும் உங்களுக்கு அன்பான பேரனாக மட்டுமே இருப்பேன்'' என்றான்.

அவனது கண்களில் வடிந்த கண்ணீர் துளிகளை துடைத்து மகிழ்ந்த பாட்டியின் உள்ளம் அவனுக்கு அமைதியாக பிரார்த்தித்தது.

**சிந்தனைக் கதை**

# எல்லோரும் மேதைகளே...

ஒரு தத்துவஞானி ஆற்றைக் கடப்பதற்காகப் படகில் ஏறினார். படகுக்காரனைப் பார்த்து, ''உனக்குப் பூகோளம் தெரியுமா?'' என்று கேட்டார்.

''எனக்குப் படகு ஓட்டத்தான் தெரியும்; பூகோளம் எல்லாம் தெரியாது'' என்றான் படகுக்காரன்.

''வாழ்க்கை ஒரு ரூபாய் என்றால், அதில் கால் ரூபாவை நீ இழந்துவிட்டதாக அர்த்தம்'' என்றார் தத்துவஞானி. சற்றுத் தூரம் போனவுடன்,

''சரித்திரம் தெரியுமா?'' என்று கேட்டார்.

''அதுவும் எனக்குத் தெரியாது'' என்றான் படகுக்காரன்.

''அரை ரூபாவை இழந்துவிட்டாய்'' என்றார் அவர். பிறகு அவனைப் பார்த்து,

''விஞ்ஞானம் தெரியுமா?'' எனக் கேட்டார்.

''அதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது அய்யா, எனக்கு படகு ஓட்ட மட்டும்தான் தெரியும்'' என்றான் படகுக்காரன்.

''முக்கால் ரூபாவை இழந்துவிட்டாய்'' என்றார் அவர். அப்பொழுது திடீரென்று ஆற்றில் சுழல் ஏற்பட்டு படகு கவிழும் நிலை ஏற்பட்டது.

''சாமி, உங்களுக்கு நீந்தத் தெரியுமா?'' என்று படகுக்காரன் கேட்டான்.

''தெரியாது'' என்றார் அந்த தத்துவஞானி.

''இப்பொழுது உங்கள் உயிரை அல்லவா நீங்கள் இழக்கப் போகிறீர்கள்'' எனக் கூறிய படகுக்காரன் நீரில் குதித்துக் கரை சேர்ந்தான். தத்துவஞானியோ நீச்சல் தெரியாமல் தத்தளித்தார். பின்பு படகுக்காரர் பரிதாபப்பட்டு அவரை கரைசேர்த்தான்.

எமது வாழ்வில் நாம் எவரையும் கீழ்மட்டமாக எண்ணக் கூடாது என்ற விடயம் இதன் மூலம் புலனாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவப் பருவம் சாதனைகள் செய்யத் தூண்டும் பருவம். வாழ்க்கையின் இலக்குகளை தீர்மானித்து வெற்றியோடு நடைபோடும் பருவம். எதையும் புதிதாக சிந்தித்து வாழ்க்கைக்கு புதிய அர்த்தங்களை சொல்லத் துடிக்கும் பருவம். இவ்வாறு தன்னுடைய 17 ஆவது வயதில் 57 கண்டுபிடிப்புக்களை செய்து கின்னஸ் சாதனை ஒன்றையும் நிகழ்த்துவதற்காக முயற்சி களை மேற்கொண்டிருக்கும் சோமசுந்தரம் வினோஜ் குமாரை அகரம் சந்தித்தது. இவருடனான சுவையான அனுபவங்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறோம்.

அயாத் அஹமட்




# "எனது கின்னஸ் சாதனை முயற்சிக்கு ஒத்துழையுங்கள்"

## 17 ஆவது வயதில் 57 கண்டுபிடிப்புக்களுடன் வினோஜ் குமார்

**அகரம்**: உங்களைப் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றைத் தாருங்கள்.

**வினோஜ் குமார்**: எனது தந்தை த. சோமசுந்தரம். இவர் கட்டடத் தொழிலாளியாக தொழில் புரிகிறார். தாய் க. நவலெட்சுமி வீட்டுத் தலைவியாக உதவி புரிகிறார். சோ. தினேஷ் குமார் எனது அண்ணன். இவர் கிழக்கு பல்கலைக்கழக பட்டதாரியாவார். நான் ஆரம்பக் கல்வியை சது/ஸ்ரீ கோரக்கர் தமிழ் வித்தியாலயத்தில் கற்றேன். தற்போது உயர் கல்வியை சது/சம்மாந்துறை முஸ்லிம் ம.ம.வி. பொறியியல் தொழிநுட்பப் பிரிவில் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

**அகரம்**: அண்மையில் உங்களது பாடசாலையின் விஞ்ஞான மன்றம் பெற்றுக் கொண்ட சாதனைகள் தொடர்பாக குறிப்பிடுங்கள்.

**வினோஜ் குமார்**: எமது பாடசாலையில் சுற்றாடல் கழகம், விஞ்ஞானக் கழகம், மாணவர் பாதுகாப்புக் கழகம், கணித ஆராய்ச்சிக் கழகம், உற்பத்தித் திறன் கழகம், சாரணியர் கழகம், இளம் கண்டுபிடிப்பாளர் கழகம்... என பல்வேறு கழகங்கள் செயற்படுகின்றன. இதில், அண்மையில் தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் விஞ்ஞான தொழிநுட்ப ஆராய்ச்சி அமைச் சுடன் இணைந்து நடாத்திய பாடசாலை விஞ் ஞான கழகங்களுக்கிடையிலான சிறந்த விஞ்ஞான கழகமாக 5 Stars விருதினை இவ்வாண்டு எமது பாடசாலை பெற்றுக் கொண்டது.

கடந்த 10 ஆம் திகதி இதற்கான பரிசளிப்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டில் உலக விஞ்ஞான தின நிகழ்வின்போது வழங்கப்பட்டது. கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல், சூழல் பாதுகாப்பு, மாணவர்களுக்கிடையே விஞ் ஞான, தொழிநுட்ப கண்டுபிடிப்பு மற்றும் சுகாதார விருத்தி என்பவற்றை மையப்படுத்தியே எமது பாடசாலையின் விஞ்ஞானக் கழகமான வானவில் கழகம் விருதுகளும் பணப் பரிசில்களும் கிடைக்கப் பெற்றது. இதன் கழகத் தலைவராக கல்லூரியின் அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகிறேன்.

**அகரம்**: உங்களது கண்டுபிடிப்புக்களைப் பற்றி குறிப்பிடுங்கள்.

**வினோஜ் குமார்**: இதுவரையில் நான் 57 கண்டுபிடிப்புக்களை செய்துள்ளேன். இதில் 29 கண்டுபிடிப்புக்கள் தேசிய மட்ட விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. மெழுகுவர்த்தியை மீள்சுழற்சிக்கு உட்படுத்தும் இயந்திரத்தை 2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் உருவாக்கினேன். இது தேசிய புத்தாக்குநர் ஆணைக்குழுவின் மூலம் முதலாம் இடமும், இலங்கை பொறியியலாளர் நிர்வாகத்தில் இரண்டாம் இடமும், இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழ கத்திற்கான சம்மேளனத்திடம் முதலாம் இடமும் பெற்று சாதனை படைத்தது.

2014 ஆம் ஆண்டு Two Wheels Helper என்ற கண்டுபிடிப்பை மேற்கொண்டேன். இது வாக னங்களில் டயர் செயலிழக்கும்போது அதனை இயக்குவதற்குத் துணையாக அமையும். இக்கண்டு பிடிப்பும் தேசிய விஞ்ஞான மன்றத்தில் சிறந்த கண்டுபிடிப்பாகவும் IPO Lanka நடாத்திய போட்டியில் 8 ஆம் இடத்தையும் இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் தொலைக்காட்சி நிகழ்ச்சியான Innova Minds போட்டியில் இறுதிச் சுற்றுக்கு தெரிவாகி சாதனை படைத்தது. இது உட்பட எமது சூழலில் காணக் கூடிய கழிவுப் பொருட்களைக் கொண்டும் பல கண்டுபிடிப்புக்கள் என்னால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதிலும் எனது கண்டு பிடிப்புக்களுக்கு இலங்கை ஆக்க உரிமைப் பத்திரம் 7 உம் சர்வதேச ஆக்க உரிமைப் பத்திரம் 2 உம் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளமை பெரும் சாத னையாக கருதுகிறேன்.

**அகரம்**: ஏனைய சாதனைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்.

**வினோஜ் குமார்**: ஒரு பொழுதுபோக்காகவும் முக்கிய முயற்சியாகவும் நான் மேற்கொண்டு வருவது முத்திரை சேகரித்தலாகும். இதுவரையில் 49,000 முத்திரைகளை சேகரித்திருக்கிறேன். முத் திரை சேகரித்தலில் ஓர் உலக சாதனையை செய்வதே என்னுடைய இலக்காகும். தனிநபர் ஒருவர் இது வரையில் 53 ஆயிரம் முத்திரைகளைச் சேகரித்ததே உலக சாதனையாக இங்கிலாந்திலிருந்து இயங்கு கின்ற கின்னஸ் சாதனைகளுக்கான நிறுவனம் குறிப்பிட்டிருக்கிறது. இச்சாதனையை நான் முறி யடிப்பதற்கு 5747 முத்திரைகள் சேகரிக்க வேண்டும். இத்தொகையை என்னால் அடைய முடியுமாயின் முத்திரைகளை சேகரித்த கின்னஸ் சாதனையாளராக நான் உலக வரலாற்றில் பதியப்படுவேன் என்பது பெருமைக்குரிய விடயமாகும். அகரம் வாசகர்கள் நண்பர்கள் உங்களிடம் இவ்வாறான முத்திரைகள் காணப்பட்டால் எனக்கு அனுப்பி வைத்து என்னுடைய முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாய் கேட்டுக் கொள்கிறேன். (எனது முகவரி இல.141, ஸ்ரீ கோரக்கர் வீதி, சம்மாந்துறை)

**அகரம்**: உங்களுடைய பொழுதுபோக்குகள் பற்றிக் கூறுங்கள்.

**வினோஜ் குமார்**: நான் அதிகமாக அறிஞர்களின் வாழ்க்கை தொடர்பான வரலாறுகளைப் படித்து வருகிறேன். அகரம் சஞ்சிகையில் வெளிவந்த அறிஞர்கள் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான ஆக்கங்களை தொடர்ந்து வாசிப்பதுண்டு. ஓய்வு நேரங்களில் கிரிக்கட் விளையாட்டிலும் ஈடுபடுவேன்.

**அகரம்**: நீங்கள் நிறைய கண்டுபிடிப்புக்களை செய்திருக்கிறீர்கள். இவ்வாறான கண்டுபிடிப்புக்களை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எவ்வாறு உங்கள் உள்ளத்தில் தோன்றியது?

**வினோஜ் குமார்**: நான் சிறு வயதிலேயே எனது ஓய்வு நேரங்களை திட்டமிட்ட முறையில் கழித்து வருவதுண்டு. எப்போதும் சூழலில் ஏதாவது பிரச்சி னைகள், முரண்பாடுகள், குழப்பங்கள் ஏற்படும்போது அவை தொடர்பாகத் தேடி ஆராய்வது என்னுடைய ஒரு வழக்கமாக இருந்தது. அத்தோடு, எப்போதும் என்னுடைய கையில் கைநூல் ஒன்றை வைத்துக் கொள்வேன். பாடசாலைக்கு செல்லும்போது ஏனைய பிரயாணங்கள், சுற்றுலாக்களின் போதெல்லாம் அதனை எடுத்துச் செல்வேன். எனது மனதில் உதிக்கின்ற அல்லது ஏதும் பிரச்சினைகள் வருகின்றபோது அதற்கு இவ் வாறாக தீர்வுகளை முன்வைக்கலாம் என சிந்திக்கும் போதெல்லாம் அவற்றை எழுதிக் கொள்வேன். பின்பு அவற்றைத் தேடி ஆராய்வது என்னுடைய வழக்கமாக இருக்கிறது. எனது வீட்டிலும் சிறியதோர் ஆய்வு கூடம் அமைத்திருக்கிறேன். அதில் என்னுடைய கண்டுபிடிப்புக்கள் எல்லாம் காட்சிப்படுத்தப்பட்டிருக் கின்றன. அத்தோடு, புதிய விடயங்கள் தொடர்பாக இணையத்தில் சென்று தேடுவதும் என்னுடைய வழக்கமாகும்.

**அகரம்**: உங்களுடைய இந்த வெற்றிக்குப் பின்னால் இருப்பவர்களை நினைவுபடுத்துங்கள்.

**வினோஜ் குமார்**: என்னுடைய இந்த வெற்றிகளுக்கு பின்னால் அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். முதலில் எனது பெற்றோரை நினைவுபடுத்துகிறேன். அத்தோடு, திரு விஜயகுமார் (அதிபர்), ஏ.சீ.ஏ.எம். இஸ்மாயீல் (அதிபர்), திருமாதி நஜீபா ரஹீம் (ஆசிரியை), எம்.ஏ.எப்.என். சிப்னாஸ் (ஆசிரியர்), எம்.ஆர். பௌசான் அஹமட் (ஆசிரியர்), ஜனாப் ஆரிப் (ஆசிரியர்) உட்பட ஏனைய ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவரும் எனது வெற்றிக்கு ஒத்துழைத்த வர்களே.

**அகரம்**: எதிர்கால இலக்கு பற்றி...

**வினோஜ் குமார்**: எதிர்காலத்தில் இன்னும் பல கண்டுபிடிப்புக்களை செய்ய வேண்டும் என்பதே என்னுடைய இலக்காகும். அதிலும் விசேடமாக சூழல் தொடர்பான விடயங்களை கண்டுபிடிப்பதையே நான் முதன்மைப்படுத்துகின்றேன். எனது வெற்றிக்கு அகரம் நண்பர்கள் பிரார்த்திக்குமாறும் வாழ்த்துமாறும் கேட்டுக் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான்
# VATICAN

உலகின் மிகச் சிறிய மற்றும் உலகில் ஆகக் குறைந்த சனத்தொகை கொண்ட நாடாக வத்திக்கான் விளங்குகிறது. இத்தாலி நாட்டின் தலைநகரான உரோம் நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் வத்திக்கான் நாட்டின் மொத்தப் பரப்பளவு 44 ஹெக்டேயர் மாத்திரமே. மக்களின் எண்ணிக்கை 900 ஐ விட குறைவாகும்.

வத்திக்கானின் தலைவராக பாப்பரசர் விளங்குகின்றார். இவரே கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தின் தலைவருமாகும். பாப்பரசரின் அலுவலகமும் உறைவிடமும் 'திருத்தூதரக அரண்மனை' என அழைக்கப்படுகின்றன.

ஆட்சி மொழி - இலத்தீன், இத்தாலிய மொழி, பிரேஞ்சு, ஜேர்மனி

**ஆட்சி மொழி:** **இலத்தீன், இத்தாலிய மொழி, பிரேஞ்சு, ஜேர்மனி**

**அரசாங்கம்:** **சமய சார்புடைய குடியாட்சி**


**வெளியுறவு அமைச்சர்:** **கர்த்தினால் தர்ச்சீசியோ பொத்தோனே**

1929உ உடு ''இலாத்தரன் உடன்படிக்கை'' மூலம் உருவாகிய வத்திக்கான் நகர் பேதுறு ஆலயம், திருத் தூதரக அரண்மனை, சிசு டைன் சிற்றாலயம் மேலும் இன்னும் சில அருங்காட்சியகங்களையும் மாத்திரமே கொண்டுள்ளது. இந்த அருங்காட்சிய கங்கள் மூலமாகவும் சுற்றுலாத்துறை மூலமாகவும் பெறும் வருவாயே வத்திக்கானின் மிகப் பெரும் வருமானமாகும்.

வத்திக்கான் வங்கி என அழைக்கப்படும் IOR வங்கி தன் நாட்டுக்கென சொந்தமாக தனி நாண யங்களை உருவாக்கினாலும் சிறப்பு ஒப்பந்தம் காரணமாக 1.1. 1994 முதல் அங்கு யூரோ பயன் படுத்தப்படுகிறது.

வத்திக்கான் எல்லைகள் வெள்ளைக் கோட் டால் பிரித்துக் காட்டப்பட்டுள்ளன. நகரைப் பாதுகாக்க சிறப்பு பாதுகாப்பு படை இருந்தாலும் சிறைச்சாலைகள் எதுவும் இங்கு இல்லை.


கத்தோலிக்க கிறிஸ்தவத்தின் தலைமை பீடமாகவும் மத்திய ஐரோப்பாவின் வரலாற்று ஆவண மாகவும் அமைந்துள்ள வத்திக்கான் வித்தியாச மான அடையாளங்களுடன் அமைந்திருக்கும் நாடாகும். அதேவேளை, அதன் ஒவ்வொரு வீதிக் கும் ஒவ்வொரு வரலாறு உண்டு.



**தேசியக் கொடி**



**தலைவர்:**
**பாப்பரசர் பிரான்சிஸ்**



**ஆட்சிக்குப் பொறுப்பாளர்:**
**பேராயர் ஜொவான்னி லஜோலோ**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







✍ தொகுப்பு: வ. முஹம்மத் நபீல்

- 2017 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நிதி அமைச்சர் ரவி கருணாநாயகவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றின் முக்கிய அம்சங்கள் சில:
- 175,000 உயர் தர மாணவர்கள் 28,000 ஆசிரியர் களுக்கு இலவச Tab கணினி வசதி
- வருட இறுதிக்குள் 1000 பாடசாலைகளின் மின் சாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்த 3000 மில்லியன் ஒதுக்கீடு. ஒவ்வொரு பாட சாலைக்கும் 50 கணினிகள் வழங்க ஏற்பாடு.
- பல்கலைக்கழக மாணவர்களின் விளையாட்டு, கலை செயற்பாடுகளுக்காக 100 மில்லியன் ஒதுக்கீடு.
- தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் கற்கும் 15,000 மாணவர்களுக்கு 8 இலட்சம் வரை கடன் உதவி.
- பகிடிவதையை தடுப்பதற்கான தனி நிலையம் அமைக்க 10 மில்லியன் ஒதுக்கீடு.
- சிறுநீரக பிரச்சினை தீர்க்கப்பட 750 மில்லியனும் நோயாளர் நலன்புரி சேவைக்கு 1000 மில்லியனும் ஒதுக்கீடு.
- சிறிய, நடுத்தர தொழில் முயற்சி கடன் உத்தரவாதத் திட்டம் ஆரம்பிக்க 500 மில்லியன் ஒதுக்கீடு.
- 26,000 ஆக உள்ள பல்கலைக்கழக நுழைவு எண்ணிக்கையை 2020 யில் இரட்டிப்பாக்க முயற்சி.
- இராணுவத்தின் பாதுகாப்பிற்காக 3500 மில்லியன் ஒதுக்கீடு.

## புதிய ஆணையாளர் நாயகம்

இலஞ்ச ஊழல்களுக்கு எதிரான ஆணைக்குழுவின் புதிய தலைவராக சரத் ஜயமன்னே ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பிரதமர் மோடியின் போர்



இந்திய அபிவிருத்திக்கு மிகப் பெரும் தடையாகக் கருதப்படும் இலஞ்ச ஊழல் மற்றும் கள்ள நோட் டுக்கள் போன்றவற்றை ஒழிக்கும் பணியில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இறங்கியுள்ளார். இதன் ஒரு கட்டமாக 1000 மற்றும் 500 ரூபாய் நோட் டுக்கள் வழக்கொழிக்கப்பட்டுள்ளன. அந்தத் தாள்களை வங்கிக்குச் சென்று மாற்றி ஏனைய பண நோட்டுக்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அரசு அறிவித்துள்ளது.

## அமெரிக்காவின் புதிய அதிபர்




ஐக்கிய அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியின் ரொனால்ட் ட்ரம்ப் தெரிவாகி யுள்ளார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஹிலாரி கிளிண்டன் எதிர்பாராத வகையில் தோல்வியைத் தழுவியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டித் அமரதேவ காலமானார்



இலங்கையின் பிரபல சிங்கள மொழி பாடகரும் இசையமைப்பாளருமான இசைக் கலைஞர் பண்டித் டப்ளியூ.டி. அமரதேவ தனது 88 ஆவது வயதில் காலமானார். (03.11.2016) எலிஸபத் மகாராணியின் வேண்டுகோளின்படி மாலை தீவுக்கான தேசிய கீதத்தையும் இசையமைத்த இவர் பல்வேறு உயரிய விருதுகளையும் வென்றுள்ளார்.

| | |
|---|---|
| பத்மஸ்ரீ விருது | - இந்தியா அரசு |
| கலாகீர்த்தி | - இலங்கை அரசு (1986) |
| தேசமானிய | - இலங்கை அரசு (1998) |
| மெக்சைகே | - பிலிப்பைன்ஸ் அரசு (2001) |

# சர்வதேச சகிப்புத்தன்மை தினம்


சகிப்புத்தன்மையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், ஐ.நா. சபையால் ஆண்டுதோறும் நவம்பர் 16 ஆம் திகதி சர்வதேச சகிப்புத்தன்மை தினம் கொண்டாடப்படுகின்றது. மனிதர்கள் அனைவரும் வன்முறையின்றி ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து நட்புடன் வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. மகாத்மா காந்தியின் 125 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில், 'மதன்ஜீத் சிங்' என்ற விருது யுனெஸ்கோ சார்பில் 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படுகிறது. இவ்விருது உலகில் சகிப்புத்தன்மை மேம்படவும் அகிம்சை தழைத்தோங்கவும் பாடுபடும் நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு வழங்கப்படுகிறது. சர்வ தேச சகிப்புத்தன்மை தினத்தை முன்னிட்டு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் புர்ஜ் பார்க்கில் நேற்று நடைபெற்ற அணிவகுப்பில் பல்வேறுபட்ட இன, மத வேறுபாடுகள் இன்றி ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். டுபாய் நாட்டில் நடைபெற்ற முதலாவது சர்வதேச சகிப்புத்தன்மை தினம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# பணியாளர்கள் தொடர்பான




# தொகை மதிப்பீடு

அரசாங்க மற்றும் அரசசார்பு சேவைகள்சார் பணியாளர்கள் தொடர்பான தொகை மதிப்பீடு கடந்த மாதம் இடம்பெற்றது. இதனை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களம் மேற்கொண்டது. அரச மற்றும் அரசசார்பு சேவைகள்சார் பணியாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்து, அவர்கள் தொடர்பான சமூக பொருளாதார தகவல்களை சேகரிப்பது தொகை மதிப்பீட்டின் நோக்கமாகும். இலங்கையில் முதல் தடவையாக 1968 ஆம் ஆண்டு அரச துறை பணியாளர்கள் சார்ந்த தொகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து நான்கு வருடங்களுக்கு ஒரு தடவை என்ற ரீதியில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முறை 11 ஆவது மதிப்பீடு இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.



# முஹம்மத் முர்சி விடுதலையாவாரா?

எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முஹம்மத் முர்சிக்கு, சிறை உடைப்பு தொடர்பான வழக்கில் குற்றவியல் நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை, அந்நாட்டு தலைமை நீதிமன்றம் இரத்துச் செய்து உத்தரவிட்டுள்ளது. மத்திய தரைக்கடல் நாடுகளில் ஒன்றான எகிப்தில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஜனாதிபதியாக இருந்த ஹொஸ்னி முபாரக் தலைமையிலான அரசுக்கு எதிராக, 2012 இல் பயங்கர கலவரம் வெடித்தது. முஹம்மது முர்சியின் தலைமையிலான முஸ்லிம் சகோதரத்துவ கட்சியினர், பொதுமக்கள் ஆதரவுடன் நடத்திய போராட்டத்தில், ஆட்சியிலிருந்து முபாரக் கவிழ்க்கப்பட்டார்; முஹம்மத் முர்சி ஜனாதிபதியானார். மீண்டும் இராணுவ சதியின் மூலம் 2013 இல் ஆட்சியை இழந்த முஹம்மத் முர்சி சிறையிலடைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை படைத்த மாணவச் செல்வங்கள்

## மா/ஆமினா மகளிர் தேசிய பாடசாலை, மாத்தளை


எம்.ஆர். சஹ்லா
171


எம்.எப். அஸ்கா
170


எம்.ஐ. ஷாமா
168


எம்.எஸ். பாத்திமா
168


எம்.ஆர்.எப். சுஹா
167


எம்.எஸ். பஹ்மா
166


எஸ்.எப். நதா
166



எம்.எஸ். மனால்
161


என். சல்ஹா
161


எம்.எப்.எப். சும்லா
161


எம்.என்.எப். ஹம்னா
158



எப். ஸப்ரா
158



எஸ்.எப். சஹ்மா
156


கே.எப். நுஸ்கா
156


எம்.ஐ. ஸபா
154


## கொ/முஸ்லிம் மகளிர் கல்லூரி, பம்பலபிட்டி



ஆர். டில்காஷ் ஹனி
182



எம்.எப். நுஹா
175



எம். தூபா மர்யம்
174



என்.எப். ஹம்தா
173


எஸ். ஸல்மா
172



எம்.எப். மும்தா
165


ஆர். ஆஇஷா ஸித்தீகா
162


எம். நுஹா
162



ஆர்.எப். நஜிமி
157


ஆர்.எப். ஸஹாரோ
155


எச்.எப். ஹிக்மா
155



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 6-11
தொடர் : 15

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

எம்.எப்.எம். பாஹிம் B.A, PGDE (Merit),RICTP,MEd
(ஆசிரிய ஆலோசகர்)
வளவாளர், தேசிய கல்வி நிறுவகம்
கணினி யுகம் சஞ்சிகையின் ஆசிரியர்

பாடம் 09

## கணினியை முகாமைத்துவம் செய்தல்

கணினி நாம் பயன்படுத்தும் மிக முக்கிய உபகரணமாகும். இவ்வுபகரணத்தில் எமக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் நாம் சேமித்திருப்போம். மேலும், எமது பணிகளை சிறப்பாக, விரைவாக செய்வதற்கு எமக்கு இலகுவில் பயன்படுத்தக் கூடிய பொருத்தமான இடங்களில் இதனை நாம் வைத்திருப்போம். அதேநேரம், இதன் பயன்பாடு பிரச்சினைகள் இன்றி நீடிப்பதற்காக இதனை உரிய முறையில் பராமரித்திருப்போம். இவ்வாறு மிக கரிசனையுடன் பயன்படுத்தும் கணினிகளின் முகாமைத்துவம் பற்றியும் நாம் தெரிந்திருத்தல் பொருத்தமானதாகும்.

### கணினி முகாமைத்துவம்

01. செயற்பாட்டு முகாமை
02. நினைவு முகாமை
03. சாதனங்களின் முகாமை
04. கோப்புகளின் முகாமை
05. பாதுகாப்பு முகாமை

### செயற்பாட்டு முகாமை




நாம் கணினியின் உதவியுடன் பல்வேறு செயற்பாடுகளைச் செய்து வருகின்றோம். உதாரணமாக, கணினியின் உதவியோடு ஒரு கடிதத்தை அச்சிடுவதை நினைவிற் கொள்ளுங்கள். உண்மையில் அச்சிடுவது மிகவும் சிறிய காரியமாக எமக்குத் தோற்றமளித்தாலும் கணினி இச் செயற்பாட்டைச் செய்வதற்கு பல்வேறு மிகச் சிறிய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. கணினி இச்செயற்பாடுகளை மத்திய செயலாக்க அலகின் மூலம் முகாமை செய்து இறுதிப் பெறுபேற்றைப் பெறுவதற்காக வாய்ப்பளிக்கின்றது.

### நினைவு முகாமை

கணினியில் பணிகளை மேற்கொள்கின்றபோதே கணினி அச்செயற்பாடுகளை நினைவிற் கொள்ள ஆரம்பிக்கின்றது. கணினியில் தற்காலிக நினைவகத்தினூடாக தகவல்களை குறுகிய நேரத்திற்கு நினைவிற் கொள்கின்றது. பயனரின் தேவைக்கு ஏற்ப நீண்ட காலத்திற்கு தகவல்கள் நினைவிற் கொள்ள வேண்டுமாயின் இரண்டாம் தர நினைவகங்களில் சேமித்து வைக்க முடியும். இவ்வாறு நினைவை முகாமை செய்வதற்கு மத்திய செயலாக்க அலகு பெரிதும் வாய்ப்பளிக்கின்றது.

### சாதனங்களின் முகாமை

கணினி பாவனைக்கு அத்தியாவசியமாக இன்று பல உதவி உபகரணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் நீண்டநாள் பயன்பாடு அதன் முகாமைத்துவத்தில் தங்கியுள்ளது. குறிப்பிட்ட ஓர் உபகரணத்தை கணினியில் பொருத்தினால் அது தொழிற்படுவதற்கு Drivers (இயக்கிகள்) அவசியப்படுகின்றன. இவ்வகையான இயக்கிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் செயற்பாட்டு முறையையும் கணினியின் மத்திய அலகு முகாமை செய்கின்றது.

### கோப்புகளின் முகாமை


கணினியின் கோப்புக்களை முகாமை செய்தல் என்பது கணினியில் தகவல்களைப் பெறுவதற்கு இலகுவாக வைப்பது என்பதாகும். கணினியில் கோப்புக்களை முகாமை செய்வதற்காக பின்வரும் ஒழுங்குகள் பேணப்படல் வேண்டும்:

1. தேவையற்ற கோப்புக்களை அழித்தல்
2. புதிய கோப்புக்களை உருவாக்குதலும் அவற்றை பொருத்தமான இடத்தில் வைத்தலும்
3. பைல்களிலும் கோப்புக்களிலும் உரிய பெயர்களை இடுதல்

### பாதுகாப்பு முகாமை

கணினி பாதுகாப்புசார் பல்வேறுபட்ட பிரசி னங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பது நாம் அறிந்ததே. குறிப்பாக, வைரஸ் பிரச்சினைகள் கணினிகளை பெரிதும் ஆட்டிப் படைக்கின்ற பிரச்சினை என்று கூறினால் அது மிகையாகாது. எனவே, கணினியின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு கணினி வைரஸ்களுக்கு எதிரான மென்பொருட்களை பொருத்திக் கொள்வது கட்டாயமானதாகும்.

# கணினி தாய்ப்பலகை
## Computer Motherboard




ஆரம்பத்தில் உருவாக்கப்பட்ட கணினிகளின் தாய்ப்பலகைகள் தற்போதுள்ள தாய்ப்பலகைகளை விட சற்று வித்தியாசமாகவே காணப்பட்டன. அவற்றில் கணினி வன்தட்டுக்கள் (hard disk) பொருத்தப்பட்டிருக்கவில்லை. மாறாக, விசைப்ப லகை (keyboard), நாடா இயக்கி (tape drive) மற்றும் நெகிழ்வட்டு (floppy disk drive) போன்ற புறக்கருவி களே தாய்ப்பலகையுடன் இணைக்கப்பட்டிருந்தன.

1990 களில் இருந்து நுண்செயலிகளின் (Microchip) பயன்பாட்டுடன் தாய்ப்பலகைகளின் வடிவமும் உள்ளடக்கமும் மாற்றம் பெற்று இற்றைப்படுத்தப்பட்டன. 1995 இதற்குப் பிறகு Intel நிறுவனத்தின் நவீன கண்டுபிடிப்புக்களும் தொடர்ந்தேர்ச்சியான முயற்சியும் Pentium என்ற அதிவேக நுண்செயலிக் குடும்பத்தை வெளியிட வாய்ப்பாக அமைந்தது. IDE சாதனங்களான வன்தட்டுக்கள் (hard disk), குறுவட்டுக்கள் ஆகியன தாய்ப்பலகையோடு ஒருங்கிணைக்கப்பட்டன.

Pentium குடும்பத்தில் Pentium க்குப் பிறகு Pentium Pro அறிமுகப்படுத்தப்பட்டது. Pentium Pro, Celeron, Pentium II, Pentium III ஆகியன சந்தையை அலங்கரித்தன. Intel நிறுவன உற்பத்தி திறனுக்குப் போட்டியாக சந்தையில் இடம்பிடித்த நிறுவனமாக AMD நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இந்நிறுவனம் Athlon என அழைக்கப்படும் தாய்ப்பலகைகளை உற்பத்தி செய்தது. இவை மலிவானவையாகக் காணப்பட்ட போதும் Pentium இற்கான செல்வாக்கும் கேள்வியும் சந்தையில் இன்றும் காணப்படுவதை அவதானிக்க முடியும்.

நவீன தாய்ப்பலகைகளில் முக்கியமான அம்சம் மின்சாரத்தினை நிர்வகிக்கும் (Power Management) தன்மையாகும். இதற்கு உயரக உள்ளமைவு மற்றும் மின்திறன் இடைமுகம் (Advanced Configuration and Power Interface-ACPI) என்ற நெறிமுறை கடைப்பிடிக்கப்படுகிறது. இதில் தாய்ப்பலகையிலுள்ள உறுப்புக்கள் மின்திறன் நிலைகளாக பிரிக்கப்பட்டு அவற்றிலுள்ள சில பகுதிகள் அல்லது முழுமையாக பயன்படுத்தாத நேரங்களில் அகல்நிலையில் (powered-down state) அனுப்பப்படுகின்றன.

தாய்ப்பலகையில் பிரதானமாக காணக் கூடிய அம்சங்கள்:

1. Central Processing Unit (CPU)
2. Random Access Memory (RAM)
3. Basic Input/Output System (BIOS)
4. Complimentary Metal Oxide Semiconductor Random Access Memory (CMOS RAM)
5. Cache Memory
6. Expansion Bus
7. Chipset இது Northbridge, Southbridge என இரு வகைப்படும். இவை கணினியின் ஏனைய பகுதிகளையும் CPU வையும் இணைக்கும் பணியினை மேற்கொள்கின்றன.
8. CPU Clock
9. Switches and Jumpers
10. Various ports



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜே.எம். அஸீம் ( நளீமி )

# தோல்வி என்பதே இல்லை!

வெற்றி கிட்டாததை அல்லது வெற்றி தவறவிடப் பட்டதைத்தான் குறிக்கிறது, இருள் போல. எனவே, தோல்வியைத் துரத்தியடிக்கலாம், இருளை துரத்தியடிப்பது போல.

'தோல்வி என்பதே இல்லை' என்பதை உறுதியாக நம்புகின்ற போதே நீங்கள் வெற்றியாளராகத் திகழ முடியும். ''என்ன! தோல்வி என்பதே இல்லையா?'' என ஆச்சரியத்தோடு நீங்கள் வினவுவது புரிகிறது. இருள்-ஒளி என்ற இரண்டு விடயங்களைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒளி என்பது ஒரு சக்தி. அதுதான் அடிப்படையில் இருக்கின்ற விடயம். இருள் என்பது ஒளி இல்லாது போகின்றதையே குறிக்கிறது. இருள் என்பது ஒரு சக்தியோ அல்லது அடிப்படையில் இருக்கின்ற விடயமோ அல்ல. மாறாக, அடிப்படையான ஒன்று இல்லாதபோது அமையும் ஒன்றாகவே இருக்கிறது.

வெற்றி-தோல்வி இதுவும் அப்படித்தான். வெற்றி என்பது அடிப்படையானது. வெற்றி இன்மையை அல்லது வெற்றி கிடைக்காததைத்தான் 'தோல்வி' என அடையாளப்படுத்துகிறார்கள். வெற்றி பெறத் தவறுவது என்பது தோல்வி அல்ல; வெற்றி தவறுவதும் தோல்வி அல்ல; வெற்றி கிட்டாததும் தோல்வி அல்ல. முதல் முறை தோற்றவன் இரண்டாவது முறை வெல்கின்றபோது தோல்வி இல்லாமல் போகிறது. இருள் விலகுகிறது; ஒளி வீசுகிறது.

இந்த அடிப்படை உண்மையை நீங்கள் நன்றாகப் புரிந்து கொள்கின்றபோது வெற்றியாளராகலாம். தோல்வி என்பது வெற்றி கிட்டாததை அல்லது வெற்றி தவறவிடப் பட்டதைத்தான் குறிக்கிறது, இருள் போல. எனவே, தோல்வியைத் துரத்தியடிக்கலாம், இருளை துரத்தியடிப்பது போல.

இது ஓர் அடிப்படையான உண்மை. அதேபோல், இந்த இருளுக்கும் தோல்விக்கும் உள்ள மற்றுமோர் ஒற்றுமைதான், தோல்வி என்பது இருள்போல ஒளி இல்லாதபோது சந்தர்ப்பம் தவறாமல் அவ்விடத்தில் நுழைந்து விடும். காலையில் வென்றவர் மாலையில் தோற்று விடுவார்; மாலையில் தோற்றவர் காலையில் வென்று விடுவார். வெற்றி என்பது ஒரு முறை கிடைப்பதல்ல. அதனை எப்போதும் உங்கள் பக்கம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு முறை வென்று விட்டோம் என பெருமிதம் கொள்கின்றபோது தோல்வி உங்களை வென்று விடும். பின்னர் இது ஆமை-முயல் கதையாகி விடும்.

**போராட்ட குணம்**

வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ளும் மதிநுட்பம் மிக அவசியம். இதற்கு போராட்ட குணம் மிக அவசியம். வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ளும் போராட்ட குணம் வெற்றிக்கு வழிகோலும். எப்போதுமே தோல்வியுடன் போட்டியிட வேண்டும். அப்போதுதான் வெற்றி ஒளி உங்களை சூழ்ந்து கொள்ளும். இல்லாவிட்டால் இருள் கவ்விக் கொள்ளும். வெற்றியையே எப்போதும் கனவு கண்டு கொண்டிருந்த தலைவர்கள் இந்தப் போராட்ட குணத்துடன்தான் இருந்தார்கள். எனவேதான், வெற்றி ஒளி அவர்களை அரவணைத்துக் கொண்டது.

**தொடர்ந்தேர்ச்சியான இயக்கம்**

பூமியில் ஒளியுள்ள பகுதியில் எப்போதும் வாழ வேண்டுமானால் நீங்கள் ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும், புவிப்பந்து சுழல்வதைப் போல. அது போலத்தான் நீங்கள் எப்போதும் வெற்றியில் நின்று நிலைக்க வேண்டுமானால் இயங்கிக் கொண்டே இருக்க வேண்டும். நீங்கள் ஓய்வெடுக்கும் தருணம் ஒருவர் உங்களை முந்தி விடலாம். இயக்கம் இல்லாவிட்டால் நீங்கள் ஜடமாகி விடுவீர்கள். இயங்காற்றல் உள்ளவர்களாக எப்போதும் திகழ்வதே வெற்றியைத் தக்கவைத்துக் கொள்ள உதவும்.

உலகில் தோல்வியைக் காணாமல் அல்லது தோல்வியடையாமல் வெற்றியடைந்தவர்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி இயங்கியவர்களே! சிலபோது அவர்கள் ஓய்வெடுத்த தருணங்களில் இருள் அவர்களைச் சூழ்ந்தபோதும் பின்னர் இயங்கி இருள் அகற்றி ஒளி வீசியவர்களே! ஜெயித்தவர்களே!

**தோல்வியின்போது நம்பிக்கையிழத்தல்**

சிலர் தோல்வியின்போது நம்பிக்கையிழந்து நிரந்தரமாகவே இருளில் மூழ்கி விடுவர். தோல்வி என்பது தற்காலிக இருள் என்பதையும் நாளை விடியல் நிச்சயம் என்பதையும் அறிந்தவர்கள் நம்பிக்கையிழக்க மாட்டார்கள். வெற்றி-தோல்வி பற்றிய இந்தப் புரிதல் உள்ளவர்களால் மட்டுமே இப்படி நம்பிக்கையோடு நடைபயில முடியும். வெற்றியாளர்கள் இந்த யதார்த்தத்தை நன்குணர்ந்தவர்கள்.

தோல்வி என்பது தற்காலிகமானது என்பதை அறிந்து கொள்ளும் வரை எவரும் அதிலிருந்து மீள்வதில்லை.

பெரிய அளவில் தோல்விகளைச் சந்திக்கத் துணிபவர்களுக்கு மட்டும்தான் மாபெரும் வெற்றிகளைப் பெற முடியும் என்றார் ரொபர்ட் கென்னடி. தோல்விகள் நல்ல பாடங்களைக் கற்றுத் தரும். அனுபவம் என்ற ஆசானின் அதிசிறந்த போதனையாக ஆழ்மனதில் பதியும். தோல்வியில் பெறுகின்ற பாடங்கள், அதற்குப் பின்னுள்ள வெற்றியை நோக்கி எம்மை மிக வேகமாக நகர்த்திச் செல்லும்.

தோல்வியை ஏற்றுக் கொள்வதுதான் தோற்பதை விடவும் பெரிய பிரச்சினையாக இருந்து வருகின்றது. சொல்லாப் போனால் அது (தோல்வியை ஏற்றுக் கொள்வது) அவ்வளவு இலகுவான காரியமல்ல என்றார் வின்ஸ்டன் சேர்ச்சில். தோல்வியிலிருந்து மீள வேண்டுமானால் தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பாரசீக மன்னன் சைரசுக்கு புகழ்பெற்ற தத்துவ ஞானி குரோசியஸ் கூறிய வார்த்தைகள் இவை:

"அரசனே! இதை நான் உனக்கு அறிவுறுத்துகிறேன். இந்தப் பாடத்தை நன்றாக மனதில் பதித்துக் கொள். சக்கரம் ஒன்று இருக்கிறது. அதில் மனித முயற்சிகள் எல்லாம் சுழன்று கொண்டு பயணிக்கின்றன. அந்த இயக்கமானது ஒருவனை எப்போதுமே அதிர்ஷ்ட சாலியாக இருக்க விடாது தடுத்து விடுகின்றது.''

இதுதான் வெற்றி-தோல்வி பற்றிய சுருக்கமான வரிகள். அற்புதமான வரிகள். தோல்வி பற்றிய யதார்த்தத்தையும் தோல்வியிலிருந்து மீள்வதற்கான வழிமுறைகளையும் கண்டறிந்தால் நீங்களும் வெற்றியாளரே! அனைவரும் தோல்வி அடையத்தான் செய்கின்றனர். தோல்வி என்பதை சரியாக அறிந்த வர்கள்தான் அதிலிருந்து மீண்டு வெற்றி அடைகின்றனர். வெற்றி அடைவது மட்டுமல்ல, தோல்வி என்பதே அதன் பிறகு அவர்களுக்கு ஏற்படுவதில்லை. ஏனெனில், தோல்விகள் தற்காலிகமானவை. வெற்றி இன்மையால் ஏற்பட்டவை என்பதை அவர்கள் புரிந்த பின்னர், வெற்றியை நோக்கிய அவர்களது பயணம் இலகுவாகி விடுகிறது; மனம் உற்சாகமடைகிறது.

நீங்கள் கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம், ஒரு தோல்விக்கும் அதிலிருந்து மீள்வதற்குமான காலம் ஆகும். இது மிகக் குறைந்த அளவாகும். தாமதித்தால் தோல்வி நிரந்தரமாகத் தங்கி விடும். தோல்வியிலிருந்து எவ்வளவு விரைவாக மீண்டெழ முடியுமோ அவ்வளவு விரைவாக மீண்டெழுந்து விடுங்கள். அப்போதுதான் வெற்றியை சாத்தியமாக் கலாம். கால தாமதம் வெற்றி-தோல்வியைத் தீர்மானிப்பதில் பிரதான பங்கு வகிக்கிறது.

பின்வாங்குவதற்கான சந்தர்ப்பங்களை வைக்காதீர்கள். பின்வாங்க வழி இல்லை என்றால் முன்னேற்றத்தைத் தவிர வேறு தெரிவு இல்லாமல் போய் விடும். தாரிக் பின் ஸியாத் ஸ்பெய்னில் காலடி வைத்ததும் கடலில் பயணித்து வந்த கப்பல்கள் அனைத்தையும் தீக்கிரையாக்கி விட்டார். வீரர்களுக்கு முன்னிருந்த தெரிவு போராடி வெல்வது அல்லது வீர மரணம் அடைவது. மாறாக, பின்வாங்க முடியாது. இறுதியில் அவர்கள் போராடி வென்றது சரித்திரமாயிற்று.

**இவற்றையும் கவனியுங்கள்...**

வெற்றி-தோல்வி என்பது ஒளி-இருள் போன்றது. தோல்வி என்பது இருள்போல தற்காலிகமானது. வெற்றி ஒளிபோல நிரந்தரமானது.

நீங்கள் வெற்றி பெறத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தோல்வி உங்களை வென்று விடும்; இருள் கவ்விக் கொள்ளும்.

தோல்வி அடைந்தால் தாமதிக்காது மீண்டும் மீண்டும் முயற்சி செய்து வெற்றியடையுங்கள். தளராத மனம் 10,000 முறை தோல்வியடைந்த எடிசனிடம் நீங்கள் கற்க வேண்டிய பாடம்.

வெற்றிக்கான மாற்றீடுகளையே எப்போதும் யோசியுங்கள். மாறாக, தோல்விக்கான மாற்றீடுகளை யோசிக்காதீர்கள். அதாவது, தோல்வி கண்டு பின் வாங்கும் வழிகளைத் திறந்து வைக்காதீர்கள். வெற்றி நோக்கி முன்னேறும் பாதைகளை அறிந்திருங்கள்.

இனி, வெற்றி பெற வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகரம் ஸ்போர்ட்ஸ்



விரைவு - உயர்வு - துணிவு



## கூடைப்பந்து

உலகின் 200 நாடுகள் கூடைப் பந்தை தீவிரமாக ரசிக்கின்றன. உடலின் அனைத்து உறுப்புக் களும் பயன்படும் வகையில் வடிவமைக் கப்பட்டுள்ள இந்த விளையாட்டின் தாயகம் ஐக்கிய அமெரிக்காவாகும்.

ஜேம்ஸ் நெய்ஸ்மித் என்பவரே பொழுது போக்காக பால்கனியில் கூடையைத் தொங்கவிட்டு அதனுள் பந்தை எறிந்து விளையாட முனைந்தபோது 1891 ஆம் ஆண்டு இந்த விளையாட்டு பிறந்தது. விளையாட்டின் சுவாரஷ்யத்தை உணர்ந்த ஜேம்ஸ் 13 விதிகளை உருவாக்கி கூடைப் பந்தை தரமான விளையாட்டாக நெறிப் படுத்தினார்.

ஆண்களுக்கான கூடைப் பந்தாட்டம் 1936 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டது. பெண்களுக்கான கூடைப் பந்தாட்டமும் 1976 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது.

வேகம், விவேகம், ஒற்றுமை இவை மூன்றுமே கூடைப் பந்தாட்டத்தின் தங்க உத்திகள்.




2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்து போட்டிகள் கத்தாரில் நடக்க ஏற்பாடாகியுள்ள நிலையில், அதற்காக இப்போதிலிருந்தே கத்தார் மும்முரமாக தயாராகி வருகின்றது. இந்த நிலையில், இந்த பணிகளில் டஜன் கணக்கானோர் உயிரிழந்திருப்பதாக மனித உரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



## கால்பந்து கனவில் சீனா

கால்பந்து விளையாட்டு ஆர்வலரான சீன அதிபர் ஷி ஜின்பிங் சீனாவை கால்பந்து விளையாட்டின் சம்பியனாக மாற்ற பல்வேறு திட்டங்களை முன்வைத்துள்ளார்.

சிரியா மற்றும் உஸ்பெகிஸ்தான் போன்ற சாதாரண அணிகளுடனான தகுதிகாண் போட்டி களில் கூட வெல்ல முடியாத அளவு பலவீனத்தில் இருக்கும் சீன கால்பந்து அணிக்கு 2006 ஆம் ஆண்டு இத்தாலி உலக கோப்பையை வெல்ல காரணமாய் அமைந்த மார் செல்லோ லிப்பி பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சீன மக்களினதும் சீன அதிபரினதும் எதிர்கால கனவாக 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறப் போகும் உலக கோப்பை கால்பந்துப் போட்டிகள் அமைந்துள்ளன.

## உலக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டிகள் நியூயோர்கில்



சதுரங்க போட்டிகளில் சம்பியன்ஷிப் பட்டத் திற்கான போட்டிகளின் இறுதிப் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இறுதிப் போட்டியில் நடப்பு சம்பியன் மக்னஸ் கார்ல்செனும் ரஷ்ய கிராண்ட்மாஸ்டர் சர்கே கார்யாகின்னும் மோதுகின்றனர். பரிசுத் தொகை 1.1 மில்லியன் என அறிவிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கெரம் சம்பியனானது இலங்கை



பிரிதானியாவில் நடைபெற்ற 7 ஆவது சர்வ தேச கரம் போட்டிகளில் இலங்கை ஆண்கள் அணி இந்தியாவை வீழ்த்தி உலக சம்பியனாகியுள்ளது. அதேவேளை, இலங்கை பெண்கள் அணி மகளிர் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

# கால்பந்தாட்டத்தில் உசேன் போல்ட்



தடகளத்தில் உலகை கலக்கிக் கொண்டிருக்கும் சாதனை மனிதன் உசேன் போல்ட் கால்பந்தாட்டப் போட்டியில் ஈடுபடத் தீர்மானித்துள்ளார். 10 நிமிடங்கள் மட்டுமே ஓடி உலகை தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்த இந்த ஓட்டப் பந்தய அசுரன், இனி 90 நிமிடங்கள் கால்பந்து அரங்கில் நிற்காமல் ஓடப் போகிறார் என ஊடகங்கள் இவரைப் பற்றி எழுதி வருகின்றன. 2017 ஆம் ஆண்டோடு ஓய்வு பெறுவதாக அறிவித்து விட்டாலும், உசேன் போல்ட் தன் கால்களுக்கு எளிதில் ஓய்வு கொடுக்க விரும்பவில்லை. ஓட்டப் பந்தயம் மட்டுமல்லாது கிரிக்கெட், கால்பந்து, கூடைப்பந்து போன்ற விளையாட்டுக்களிலும் போல்ட் திறமையானவர். அதிலும் கால்பந்தின் மீது அதீத விருப்பம் கொண்டவர்.

# டெனிஸ் தரவரிசையில் முதலிடத்தில் பிரிட்டிஷ் வீரர்



புதிதாக வெளியிடப்பட்டுள்ள டெனிஸ் தரவரிசை பட்டியலின்படி பிரிட்டிஷ் சம்பியன் ஆண்டி மர்ரீ ஆண்கள் பிரிவில் முதலிடத்தைப் பிடித்துள்ளார். 1973 ஆம் ஆண்டிலிருந்து கணினிமயமாக்கப்பட்ட தரவரிசைப் பட்டியல் வெளியாகத் தொடங்கிய பின் இந்தப் பட்டத்தைக் கைப்பற்றிய முதலாவது பிரிட்டிஷ் வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



நடப்பு ஆசிய ஹொக்கி சம்பியனான பாகிஸ்தானை தோற்கடித்து இந்தியா ஆசியாவின் ஹொக்கி சம்பியன் என்ற பட்டத்தை வென்றுள்ளது.



தொடர்ச்சியாக அதிக தடவைகள் ரக்பி போட்டிகளில் வெற்றி பெற்று (18 போட்டிகள்) நியூஸிலாந்து ரக்பி அணி கின்னஸ் சாதனை படைத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவிற்கு

அன்பின் அக்காவிற்கு
என் கரங்கள் தீட்டிடும் அழகிய ஓவியம்
இக்கவிதை!

அன்பின் அகராதியே!
அக்கறையின் ஒரு பாதியே!
உண்மை ஒன்று சொல்லவா
என் உள்ளம் எப்போதும்
உன் பக்கமே!
துன்பங்களையும் இன்பங்களாய் மாற்றி
என் துயர் துடைக்கும் தோழி
நீயே!

உள்ளம் முழுக்க என்னைப் பற்றிய
சிந்தனைகளால்
கோட்டை கட்டியிருப்பவளே!
மண்ணோடு புதையும் வரை
நெஞ்சோடு வைத்திருப்பேன்
உன் இனிய நினைவலைகளை

இப்படிக்கு உன் தங்கை...!

ஆஇஷா முனவ்வரா
முதலாம் வருடம்
ஆஇஷ சித்திக்கா வளாகம்

# அன்னையைப் போற்றுவோம்

பொறுமையாய் எங்களை
பூமியில் ஈன்றவள்
பூவாகக் காத்தெம்மை
வாழ்வித்த தாயவள்
பெற்று முகர்ந்தவள்
பெருமையைக் கொண்டவள்

பேரிட்டுப் பூரித்து
பாராட்டி வளர்த்தவள்
கற்றுச் சிறக்க
கதை பல சொன்னவள்
அன்பின் உறைவிடமாம்
அன்னையைப் போற்றுவோம்

உதிரத்தைப் பாலாக்கி
உண்ணக் கொடுத்தவள்
உயிர் தந்த தாயவளை
உளமாரப் போற்றுவோம்

அதிர்ந்து பேசாமலே
அன்போடு அணைப்பவள்
அன்பின் உறைவிடமாம்
அன்னையைப் போற்றுவோம்

பாத்திமா நஸ்ரா
மேமா/மது/பலந்தை மு.வி.

# மனதைக் கவர்ந்த பூ

ஒத்த குணத்தாரை இணைக்கும் பூ
நித்தமும் நிழலாய் தொடரும் பூ
மற்ற உறவுகளை மிஞ்சும் பூ
மொத்தமாய் மனதை கவரும் பூ

சுத்தம் மிகுந்திட சுடர் விடும் பூ
பத்தியம் காத்திட செழித்திடும் பூ
பித்தாக மாறி பிதற்றிடும் பூ
பித்தலாட்டம் சேர்ந்திட பிரித்திடும் பூ

தத்தமதென தனதாக்கிடும் பூ
தத்துவங்கள் மிகச் சொல்லிடும் பூ
சத்தியம் காத்திட சோபிக்கும் பூ
செத்திடுமே ஓவியம் சேர இப்பூ

முத்திரை பதித்திட அலர்ந்திடும் பூ
புத்தம் புதியதாய் மலர்ந்திடும் பூ
உத்தமம் உதிரத் துடைத்திடும் பூ
இத்தரை மீதினில் சிறந்தது நட்பு

நிபாஹா பர்வின் இஸ்ஹாக்
ஹாதியா இஸ்லாமிய நிறுவனம்
குரிகொடுவ, பஹமுன

## பேசும் கவிதை - இல 20



- படம் சொல்லும் சேதிகளை கவிதையாக எழுதியனுப்பலாம்.
- கவிதைகள் பத்து வரிகளுக்குள் அமைதல் வேண்டும்.
- எழுதி அனுப்பப்படும் கவிதைகள் கவிதைச் சரத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்படும் சிறந்த முதல் கவிதைக்கு பரிசாக பெறுமதியான புத்தகம் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
- கவிதைகள் தபாலட்டையில் மாத்திரமே எழுதப்படல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி: 2016 டிசம்பர்20**

அனுப்ப வேண்டிய முகவரி:
அகரம் சஞ்சிகை, 77, தெமடகொட வீதி,
கொழும்பு 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டுக்குரிய ஏனைய கவிதைகள்



### முதலிடம் பெற்ற கவிதை

### சிறு குடிசையாவது தா

எங்கோ யாரோ செய்த தவறு
யாருக்கோ பிடித்த
இனக் குரோதம்
இங்கு சொந்த பந்தங்களின்
அடையாளம் இல்லை
சொந்த வீட்டின்
அடையாளமும் இல்லை
சொந்த நாட்டில் உலாவ
சுதந்திரமும் இல்லை
சாந்தி சமாதானம் என
சத்தமிடும் ஐ.நா.வே
எனக்கு நீ வேறொன்றும்
தர தேவையில்லை
நிம்மதியாக வாழ
சிறு குடிசையாவது தா!
அது போதும்...!

மஹ்ரூப் நஸீஹா
பாதிமா ஸஹ்ரா வளாகம்

### நாளைய விடியல்

கொடுமைகளை கண்டு
கலங்காதே..!
கொடுமைகளின்
விளைவுகள்தான்
உனது வீரமும் தியாகமும்
திறந்த மனப்பாங்கை
பொறுமையுடன்
ஏற்றுக்கொள்
உயர்ந்த நோக்கத்துடன்
வளர்வாய்

நிப்ரோஸா திக்ரா
பாதிமா ஸஹ்ரா வளாகம்

### பசி

துப்பாக்கிகள்
ஓய்ந்து விட்டன
நெருப்புகள்
அணைந்து விட்டன
கனவுகள்
காணவாகி விட்டன
பசி மட்டும்
பற்றியெரிகிறது

எம்.எச். அம்மார்
தெல்தோட்டை

### துஷ்பிரயோகம்

அநியாயம் நடக்கும்
இடமெல்லாம்
ஷைத்தானின்
ஊசலாட்டம்
இருளே
என் வீடாக இருந்தால்
விழிகள் வெறும் குருடுதான்
பெண் என நீங்கள்
இகழ்ந்துரைத்தாலும்
ஏகனின்
பாதுகாப்பு எங்களுக்கு
போதுமானது

எம்.எஸ். சாரா
பரகாதெனிய தேசிய பாடசாலை

### வறுமையுடன்...

உண்டுறங்கிப் பிணி தீர
கண்டு களித்துப் பாரினில்
களிப்புடனே வாழ்ந்திடும்
மாந்தர் மத்தியில்
அடுத்தவேளை உணவுக்காய்
கண்ணில் ஏக்கத்துடன்
நான்...

பாத்திமா நிப்ரா
மடபொகுனை

### உணவுக்காக

ஊன் உறக்கம் இன்றி
தனியாய் வாடுகிறேன் நான்
உணவு தருவதற்கு
உறவுகள் எங்கே

இப்ஹாமா இஸ்மாயீல்
பெலன்த மு.வி

### கொடுமை

மொட்டு என்று கூறிடுவோர்
மலரும் முன்னே பறித்தெடுப்பார்
சிட்டு என்று மெருகு செய்வோர்
சிறகொடித்து பறக்க சொல்வார்
முத்தென்று கூறிடுவோர்
மூடிவைத்து கொடுமை செய்வார்
கட்டான எமது உடலை காவு
கொண்டு புதைத்திடுவார்

ஆர்.எம். அஸ்ரிக் முஹம்மத்
பொ/அல் அஸ்ஹர் ம.வி.

### மறைந்திருப்பது ஏன்?

கண்ணில் பட்டவர்களை எல்லாம்
கருணையின்றி காவு கொள்ளும்
கயவன் யூதனின்
கண்ணில் படாமல்
மறைகிறாயா?
இல்லையெனில்
பாதகங்கள் பரவியிருக்கும்
பாரினிலே வாழ்ந்தால்
பச்சிளம் குழந்தை நீயும்
பாவியாகி விடுவாய்
என்று மறைகிறாயா?

எம்.எஸ்.எம். ஷபீக்
வள்பாளுவ மு.ம.வி.
கல்கமுவ

### எதற்காக

இடறி விழுந்து
இதயம் நொந்து
இருட்டு மூலையில்
விம்முகிறோம்
இனியாவது விடிவு
இருவிழிகளுக்கு தெரியுமா?

பாத்திமா ஹனா
சரிக்காமுலை

அகரம் சஞ்சிகையை
தொடராகப் பெற்றுக்கொள்ள...
தொடர்புகளுக்கு:
சகோ. கே.பி. அஸ்மல் கான்
077 698 4202



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வகுப்பறை நேரத்தை
## வினைத்திறனாகப் பயன்படுத்துவோம்

***ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)***
BA, Dip.in Counseling (NISD), PGD in Psychology

பாடசாலை நேரங்களில் வகுப்பறைக்கு ஆசிரியர்கள் சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் மாணவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைக்கப் பெறுகின்றது. குறித்த ஓய்வு நேரத்தை (Free Lession Period) மாணவர்களாகிய நாம் எவ்வாறு பிரயோசனப்படுத்துகின்றோம்? அந்த ஓய்வு நேரத்திலிருந்து உச்ச நலன்களைப் பெற நாம் கையாளும் உத்திகள், செயற்பாடுகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள்தான் என்ன?

பெரும்பாலான மாணவர்கள் இத்தகைய ஓய்வு நேரங்களைத் தவறான முறையிலும் பிரயோசனமற்ற வழிகளிலும் செலவிடுவதையே முறைப்பாடுகளாப் பெறுகின்றோம்.

- ❖ வகுப்பறைக்கு வெளியில் சும்மா நின்று கொண்டிருத்தல்
- ❖ கல்விக்கும் மாணவர்களுக்கும் பாடசாலைச் சூழலுக்கும் பொருத்தமற்ற கதைகளிலும் கலந்துரையாடலிலும் ஈடுபடல்
- ❖ சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று வருதல்
- ❖ அடுத்த வகுப்பறைக்குச் சென்று அரட்டையடித்தல், தகராறுகளில் ஈடுபடுதல்
- ❖ தமது வகுப்பறைக்குள் அடுத்தவர்களைக் கிண்டல் செய்தல், கேலி செய்தல்
- ❖ விரும்பத்தகாத, தவறுகள் மற்றும் குற்றங்களில் ஈடுபடுதல்
- ❖ பெண்களைப் பொறுத்தவரை கல்விக்குப் புறம்பான வீட்டுக் கதைகள், நாடகம், சினிமா போன்ற விடயங்களைப் பற்றிப் பேசுதல்
- ❖ கூச்சலிட்டு கத்துதல்
- ❖ காதல் விவகாரங்களில் ஈடுபடுதல்
- ❖ அடுத்தவர்கள் படிப்பதற்கு தொந்தரவாக அமைதல்

இவ்வாறு இதன் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. இவற்றைக் கண்டு, கருத்திலெடுத்து நெறிப்படுத்த முனையும் மாணவத் தலைவர்களுடனும் ஆசிரியர்களுடனும் வீணான முரண்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களும் ஏற்படாமலில்லை.

இத்தனைக்கும் காரணம் வகுப்பறையில் கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் பிரயோசனம் தரும் வழிமுறைகளில் திட்டமிட்டுப் பயன்படுத்தாமையும் ஓய்வு நேரம், பொழுது போக்கு என்பவை குறித்து மாணவர்களிடம் இருக்கும் பிழையான மனப் பதிவும் எனக் குறிப்பிடலாம்.

ஓய்வு நேரம் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது:

*''எனவே, (வேலைகளிலிருந்து) நீர் ஓய்ந்ததும் (இறை வழியிலும் வணக்கத்திலும்) முயல்வீராக.'' (94:07)*

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஓய்வு நேரம் பற்றிப் பின்வருமாறு கூறினார்கள்:

''இரண்டு பாக்கியங்களில் பெரும்பாலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அலட்சியமாய் இருக்கின்றனர். அவை ஆரோக்கியமும் ஓய்வுமாகும்.''

*(அறிவிப்பவர்: அனஸ் (ரழி), நூல்: புகாரி - 6412)*

எனவே, ஓய்வு நேரம் என்பது கட்டாயம் பயன்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால், அது பிரயோசனமான, நமக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும் விடயங்களாக அமைய வேண்டும். அந்த வகையில் மாணவர்களாகிய நீங்கள் உங்களுக்கு வகுப்பறையில் கிடைக்கும் ஓய்வு நேரங்களைப் பயன்படுத்தும் முறை சரிதானா? என ஒரு முறை மீள் பரிசீலனை செய்து பாருங்கள்.

**என்ன செய்யலாம்?**

**1. புதிர்ப் போட்டிகளை நடத்துதல்**

வகுப்பறையில் பாடத்துக்கு ஆசிரியர் சமுகம் தராத ஓய்வு நேரங்களில் புதிர்ப் போட்டிகள், அறிவுக்களஞ்சியப் போட்டிகள், வினா - விடைப் போட்டிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்தலாம். இதற்கு எல்லா மாணவர்களும் ஒத்துழைக்க வேண்டும். வகுப்பில் கெட்டித்தனமான மாணவர்கள் இருப்பார்கள். அதேபோல் என்ன விடயம் என்றாலும் முன்வந்து செயற்படுத்தக் கூடிய மாணவர்கள் இருப்பார்கள். இப்படி பல சிறப்பம்சங்களைக் கொண்ட மாணவர்களும் இருப்பார்கள். எல்லோரும் ஒன்றிணைந்து மேற்சொன்ன போட்டி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய முடியும். வகுப்பிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகவோ அல்லது தேவைக்கேற்ப இரண்டுக்கு மேற்பட்ட குழுக்களாகவோ பிரித்து தங்களுக்குள் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தி வெற்றி பெறும் குழுவுக்கு பரிசில்களை வழங்கலாம். பரிசு சிறியதாகினும் சரியே.

மேலும், பத்திரிகைகள், அகரம் போன்ற சஞ்சிகைகளில் வரும் பொது அறிவுத் தகவல்கள், பாடத்துடன் தொடர்புடைய வினாக்களைத் தொகுத்து போட்டிகளை நடத்தலாம்.

எனக்கு ஓர் அனுபவமிருக்கிறது; நாங்கள் தரம் 10 இல் கல்வி கற்கும்போது அறிவு ஆரம் எனும் வார மலரில் வரும் விஞ்ஞானக் கேள்விகளைத் தொகுத்து அவற்றை எங்களுடைய வகுப்பறையில் ஆசிரியர் வராத பாடவேளைகளில் கலந்துரையாடுவோம். குறிப்பாக, அவற்றைக் கரும்பலகையில் எழுதி வகுப்புத் தோழர்களுக்கு நான் விளங்கப்படுத்திய அருமையான ஞாபகங்கள் இன்னும் நெஞ்சில் நீங்காத நினைவுகளாக உள்ளன.

**விளைவாக:**

- ❖ பாடத்தில் தெளிவும் தவணைப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறும் கிடைக்கும்.
- ❖ கணித, விஞ்ஞான, பொது அறிவுப் போட்டிகளில் வெற்றியைப் பெறுவதற்கான வாய்ப்பு
- ❖ பயனுள்ள, சுவாரஷ்யமான பொழுதுபோக்காக அமையும்.
- ❖ எங்களுக்குள்ளேயே தன்னம்பிக்கையும் உத்வேகமும் உற்சாகமும் அதிகரிக்கும்.
- ❖ படிப்பில் ஆர்வமும் ஈடுபாடும் மேலும் அதிகரிக்கும்.
- ❖ எமது வகுப்புத் தொடர்பில் பாடசாலையிலும் பாடசாலைக்கு வெளியிலும் நன்மதிப்பும் பிறருடைய ஒத்துழைப்பும் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.
- ❖ தவணை முடிவில் தொகுத்த வினாக்களையும் விடைகளையும் ஒரு புத்தகமாக வெளியிட முடியும்.
- ❖ பாடசாலையில் இது ஒரு முன்மாதிரியாகக் கொள்ளப்படும்.
- ❖ பாடசாலையை விட்டு வெளியேறிய பின்னர் அரசாங்கப் போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு உறுதுணையாக அமைவதுடன் போட்டிப் பரீட்சைகளுக்கு இலகுவாகத் தயாராவதற்கான மனோநிலையையும் தோற்றுவிக்கும்.
- ❖ கல்விப் பொதுத் தராதர உயர் தரப் பரீட்சையின் போது பொது அறிவுப் பாடத்தில் எளிதாக அதிகமான புள்ளிகளைப் பெறலாம்.
- ❖ காதல் எனும் நோய், வீண் பேச்சு, வீணான கேளிக்கைகள், தேவையில்லா சச்சரவுகள், வகுப்பைப் பற்றிய தப்பான பார்வை என்பன குறைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும்.

இவ்வாறான ஆக்கத்திறன் மிக்க பொழுதுபோக்குச் செயற்பாடுகளுக்கு வலயத் தலைவர், வகுப்பாசிரியர், ஏனைய ஆசிரியர்கள் மற்றும் அதிபர் ஆகியோரினதும் பாடசாலைக்கு வெளியிலுள்ள புத்திஜீவிகள், தனவந்தர்கள், ஆர்வலர்களினதும் உதவியையும் ஒத்தாசையையும் பெற்றுக் கொள்ள முடியும்.


எனவே, எமக்கு வகுப்பறையிலும் பாடசாலைக்கு வெளியிலும் கிடைக்கும் ஓய்வு நேரங்களைத் திட்டமிட்டுச் சரியாகப் பயன்படுத்துவோமென்றால் வாழ்நாள் முழுவதும் பிரயோசனம் தரக் கூடியதாக அமையும். முயல்வோம்! வெல்வோம்! இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1 ஆம் 2 ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள உருக்களிடையே மிக நெருங்கிய தொடர்புடைய உருக்களைக் குறிக்கும் எழுத்துக்கள் உள்ள விடையைத் தெரிவு செய்க.**

1\.




i. A யும் D யும் ii. C யும் B யும்

iii. D யும் F யும்


2\.




i. C யும் D யும் ii. A யும் E யும்

iii. A யும் B யும்

3\. முதல் உருவிற்கு சமமான உருவைத் தெரிவு செய்க.




4\. கீரிக்குப் பிள்ளை போல அணிலுக்கு

i. கன்று ii. போதகம்

iii. பிள்ளை

5\. பூந்தோட்டம் ஒன்றில் எப்போதும் இருப்பது?


i. பூக்கள் ii. காவற்காரர்

iii. மரங்கள்

6\. i. 9

ii. 8


iii. 11




7\. i. 14

ii. 15

iii. 17




8\. 60cm சுற்றளவைக் கொண்ட சதுரமொன்றின் ஒரு பக்க நீளம் யாது?

i. 15 m ii. 20 cm

iii. 15 cm

**பின்வரும் பிரசினங்களை விளக்கி அதற்கேற்ப 9 - 11 ஆம் வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்க.**

```
  A B C
+ A B C
  8 6 4
```

9\. A யின் பெறுமதி யாது?

i. 3 ii. 5 iii. 4

10\. B யின் பெறுமதி யாது?

i. 2 ii. 3 iii. 4

11\. A x C யின் பெறுமதி யாது?

i. 8 ii. 7 iii. 6

12\. அமலாவிடம் உள்ள பணத்தின் 1/4 கமலாவிடம் இருந்தது. அமலாவிடம் 500 ரூபா இருந்தது எனின், கமலாவிடம் உள்ள பணம் எவ்வளவு?

i. 2000 ரூபா

ii. 250 ரூபா


iii. 125 ரூபா

13\. விழி என்பதன் ஒத்த கருத்துச் சொல்?

i. நயனம் ii. செவி

iii. புலன்

14\. உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?



i. 4

ii. 5

iii. 6

15\. உணவை மென்று விழுங்கும் ஒரு பிராணி?

i. கொக்கு ii. ஆடு

iii. முதலை

16\. புரதச் சத்துள்ள உணவுகளை உண்பதால்


i. சக்தி கிடைக்கிறது

ii. உடல் வளர்ச்சியடைகிறது

iii. நோய்களில் இருந்து பாதுகாப்பு

17\. இவ்வுருவை மேலிருந்து பார்க்கும்போது தெரிவது?




i.  ii.  iii. 




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.





19. தோட்டமொன்றில் முதல் நாள் பறிக்கப்பட்ட தேங்காய்கள் 1414. இரண்டாம் நாள் பறிக்கப்பட்ட தோங்காய்கள் 1575 எனின், இரு நாட்களும் பறிக்கப்பட்ட தேங்காய்கள்?

i. 3000 ii. 2980 iii. 2990

20. குமாரிட் ரூ. 30.00 பெறுமதியான 2 ரூபா, 5 ரூபா நாணயக் குற்றிகள் காணப்பட்டன எனின், நாணயக் குற்றிகளின் எண்ணிக்கையினை சரியாகக் காட்டக் கூடிய விடையாக அமையக் கூடியது?


i. ரூபாய் 2 நாணயங்கள் 4, ரூபாய் 5 நாணயங்கள் 5
ii. ரூபாய் 2 நாணயங்கள் 5, ரூபாய் 5 நாணயங்கள் 4
iii. ரூபாய் 2 நாணயங்கள் 3, ரூபாய் 5 நாணயங்கள் 5

21. உருவில் நிழற்றப்படாத பகுதியை பின்னமாகத் தருக.



i. 2/4 ii. 2/6
iii. 4/6

22. எட்டாயிரத்து ஆறு என்பது எண் சட்டத்தில் சரியாகக் காட்டப்பட்டுள்ளதை தெரிவு செய்க.




i. ii. iii.

**23 ஆம் 24 ஆம் வினாக்களுக்கு பாடலில் இருந்து விடை தருக.**

பூக்களிடம் கற்றுக் கொள்
புன்னகை புரிவாய்
மரங்களிடம் கற்றுக் கொள்
வள்ளலாய் வளர்வாய்

23. பாடலில் குறிப்பிடப்பட்ட சினைப் பெயர் ஒன்று?

i. மரங்கள் ii. பூக்கள்
iii. வள்ளலாய்

24. பாடலில் இடம்பெற்ற புன்னகை என்பதன் ஒத்த கருத்துச் சொல்?

i. சிரிப்பு ii. கற்றுக் கொள்
iii. வள்ளலாய்

25. 200 இன் நான்கில் ஒன்றுடன் 18 ஐக் கூட்டினால் வரும் விடை?

i. 52 ii. 68 iii. 78

26. வரம், ராகம், காரம்

i. ராகம் ii. தாகம்
iii. வானம்

27. பின்வரும் வாக்கியத்தில் மிகவும் சரியாக எழுதப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

i. வானத்தில் வென்னிலா ஓடம்போலத் தோன்றியது.
ii. வாணத்தில் வெண்ணிலா ஓடம்போலத் தோன்றியது.
iii. வானத்தில் வெண்ணிலா ஓடம்போலத் தோன்றியது.

28. நேற்று ஞாயிற்றுக்கிழமை எனின், நாளை மறுநாள் என்ன கிழமை?

i. புதன் ii. செவ்வாய்
iii. வியாழன்


**பொருத்தமான உருச்சோடியைத் தெரிவு செய்க.**

29.



i. ii. iii.

30.



i. ii. iii.

○ + ○ = 4
□ + ○ = 8 எனின்

31. ○ = ?

i. 4 ii. 2
iii. 5

32. □ = ?

i. 12 ii. 6
iii. 4

**44ஆம் பக்கம் பார்க்க...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில், எம்.எம். முபாரக்

01. இந்தியாவின் தமிழ் நாட்டிலே 'பறம்பு' என்னும் மலைநாடு உள்ளது. அதை பாரி என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி தவறாதவன். அவனுடைய ஆட்சியின் கீழ் முந்நூறு சிற்றூர்கள் இருந்தன. இம்மன்னன் மக்களிடம் மட்டுமன்றி தாவரங்களிடமும் பிராணிகளிடமும் மிகுந்த அன்பும் இரக்கமும் வைத்திருந்தான்.

1. பாரி மன்னன் ஆட்சி செய்த நாடு எது?
2. இப்பந்தியில் வந்துள்ள குணப்பெயர்கள் இரண்டு தருக.
3. இம்மன்னனுடைய ஆட்சியின் கீழ் எத்தனை சிற்றூர்கள் காணப்பட்டன?
4. பந்தியில் வந்துள்ள உயர்திணை படர்க்கை பன்மை பெயர்ச் சொல் ஒன்று தருக.
5. பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.

   சிற்றூர் :.........................................

   முந்நூறு :.........................................
6. 'வைத்திருந்தான்' என்பதன் எதிர்கால வடிவம் யாது?
7. நீதி என்பதன் எதிர்ச்சொல் ஒன்று தருக.
8. வன்பு என்பதன் எதிர்ச்சொல் ஒன்று தருக.
9. இப்பந்தியில் வந்துள்ள காற்புள்ளியும் முற்றுப்புள்ளியும் தவிர்ந்த நிறுத்தற் குறி எது?

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

1. ...................... இரண்டு மழை சோவெனப் பெய்தது. (வானம்/வாணம்)
2. அப்பா இன்று தலை ...................... காரணமாக வேலைக்குச் செல்லவில்லை. (வழி/வலி)

03. பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிந்து எழுதுக.

1. நான் கடிதம் ................... (எழுதினோம்/எழுதினேன்)
2. கண்ணாடி கீழே விழுந்து .................... (உடைந்தது/உடைந்தன)

04. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி சரியான வாக்கியத்தை அமையுங்கள்.

1. வைத்திருப்போம்/நாம்/எப்போதும்/சுத்தமாக/சுற்றாடலைச்
2. பறந்தன/கூட்டமாகப்/கொக்குகள்/வெள்ளைக்

05. பின்வரும் வெற்றிடங்களை நிரப்புக.

1. ஆடு - குட்டி என்பது போல மாடு - ........
2. யானை - பிளிறும் என்பது போல நாய் - .......

06. கீழே தரப்பட்டுள்ள வசனங்களிலுள்ள எழுவாய்ச் சொற்களின் கீழ் கோடிடுக.

1. கறுப்பு ................ வேகமாக ஓடியது.
2. கள்வனைக் கண்ட ............ குரைத்தது.

07. கீழுள்ள வசனங்களின் தடித்த எழுத்தில் காட்டப்பட்டுள்ள சொற்களின் ஒத்தகருத்துச் சொற்களைத் தருக.

1. மேற்கு வானில் **சூரியன்** மறைந்தது.
2. **காடு**களில் மான்கள் கூட்டம் தண்ணீர் தேடி அலைந்தன.

08. பின்வரும் தமிழ் சொற்களுக்கான ஆங்கில சொற்களை ஆங்கில எழுத்துக்களில் தருக.

1. ஞாயிற்றுக்கிழமை .............................
2. அப்பிள் பழம் ...........................

09. தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் தருக.

1. What is your name:
2. Please sit down:

10. பின்வரும் தமிழ் சொற்களுக்கான சிங்கள சொற்களை தமிழ் எழுத்துக்களில் தருக.

1. தங்கை
2. பூக்கள்

11. தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியங்களின் கருத்தை தமிழில் தருக.

1. மே மகே பாசல
2. ஓயாகே வயச கீயத

12. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான விடைகளை எழுதுக.

1. செங்கற் குவியலொன்றில் 3245 செங்கற்களும் மற்றொரு குவியலில் 9488 செங்கற்களும் இருந்தன. எனில், இரு குவியல்களுக்கிடையிலான வித்தியாசம் யாது?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 800 இன் அரைவாசியின் 1/4 பங்குடன் 30 ஐக் கூட்டினால் வரும் விடை யாது?

3. பண்ணையொன்றில் 16 கோழிகளும், 21 வாத்துக்களும், 8 ஆடுகளும் இருந்தன. அப்பண்ணையிலுள்ள பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை யாது?


4. மண்டபம் ஒன்றில் ஒரு நிரையில் 5 கதிரைகள் வீதம் 5 நிரைகளும், 10 கதிரைகள் வீதம் 8 நிரைகளும் காணப்பட்ட எனின், மண்டபத்திலுள்ள மொத்த கதிரைகள் எத்தனை?

5. தரப்பட்டுள்ள உருவின் சுற்றளவு யாது?




6. பெட்டியொன்றிலிருந்த 828 முட்டைகளில் 1/3 பங்கு உடைந்து இருந்தன எனின், பெட்டியிலிருந்து நல்ல முட்டைகள் எத்தனை?


7. B பாத்திரத்தினால் 4 தடவைகள் நீரை எடுத்து A பாத்திரத்தில் ஊற்றினால் அது நிரம்பும். எனின், B பாத்திரம் கொள்ளக் கூடிய அளவு 2 $l$ எனின், A பாத்திரத்தின் கொள்ளவு யாது?





8. 6845 என்பதில் இலக்கம் 4 இன் பெறுமனம் யாது?

9. 2600 என்ற எண்ணுக்கு முன்னாலுள்ள எண்ணைத் தருக.

10. கமலாவுக்கு ரூ. 140.00 உம், விமலாவுக்கு ரூ. 210.00 யும் கொடுத்த பின்னர் அமுதாவிடம் ரூ. 575.00 இருந்தது எனின், அமுதாவிடம் ஆரம்பத்தில் இருந்த பணம் யாது?


11. 
உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னத்தில் தருக.

12. 

1. உருவிலுள்ள செங்கோணங்கள் எத்தனை?

2. உருவிலுள்ள செங்கோணத்தை விட சிறிய கோணம் எத்தனை?

13. பாசில் கடைக்குச் சென்று ரூபாய் 42.00 பெறுமதியான சவர்க்காரம் ஒன்றையும், ரூபாய் 150.00 பெறுமதியான கொப்பிகள் இரண்டையும் வாங்கிக் கொண்டு கடைக்காரரிடம் ரூபாய் 500.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

14. 

1. இத்திண்ம உருவின் பெயர் என்ன?

2. இவ்வுருவிலுள்ள கிடையான விளிம்புகள் எத்தனை?

15 முதல் 44 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

15. நீரை வெப்பமேற்றும்போது நிகழும் மாற்றம் யாது?

i. பனிக்கட்டியாகும் ii. ஆவியாகும்
iii. உருகும்

16. நீரினுள் அமிழ்ந்து வாழும் தாவரம் அல்லாதது எது?

i. தாமரை ii. பாசி
iii. ஐதரில்லா

17. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம் அல்லாதது எது?

i. வேம்பு ii. இறப்பர்
iii. முள் முருக்கை

18. நான்கு இதழ்களைக் கொண்ட பூ பின்வருவனவற்றுள் எது?

i. கழுகு ii. வெட்சி iii. அவர்

19. இலங்கையில் மிக நீளமான நதி எது?

i. நைல் நதி ii. மகாவலி கங்கை
iii. களுகங்கை

20. மாமிச உணவுகளை மட்டும் உண்ணும் பறவை எது?

i. சிங்கம் ii. காகம் iii. கழுகு

21. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம் பின்வருவனவற்றுள் எது?

i. முதலை ii. இறால் iii. மீன்

22. இலங்கையின் தலைநகரம் எது?

i. கண்டி
ii. ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை
iii. அனுராதபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. உடலுக்கு சக்தியைத் தரும் போசணைக் கூறு எது?

i. புரதம் ii. உயிர்ச்சத்துக்கள்
iii. மாப்பொருள்

24. எக்குறைபாடு காரணமாக மாலைக்கண் நோய் ஏற்படுகிறது?

i. விற்றமின் A ii. விற்றமின் B
iii. விற்றமின் C

25. பின்வருபவர்களில் ''ஏப்ரன்'' அணிந்து வேலை செய்பவர் யார்?

i. தையற்காரர் ii. சமையற்காரர்
iii. குயவர்

26. படத்தில் காட்டப்படும் உபகரணம் யாது?

i. உளி ii. தூக்குக் குண்டு
iii. மணியாசு

27. காய்ந்த மரமுந்திரி வித்தை இரண்டாக பிளக்க பயன்படுத்தப்படுவது எது?

i. கத்தரிக்கோல் ii. கோடரி
iii. பாக்குவெட்டி

28. 'தைப் பொங்கல்' பண்டிகையை கொண்டாடு பவர்கள் எச்சமயத்தவர்?

i. இந்துக்கள்
ii. கிறிஸ்தவர்கள்
iii. பௌத்தர்கள்

29. வேடுவர்களின் புனித நூல் எது?

i. திரிபீடகம் ii. பகவத் கீதை
iii. யாக்பெல்

30. எல்லா காலத்திலும் பூக்கும் பூ எது?

i. மா ii. பலா
iii. வாழை

**விடைகள்**

01.
1. இந்தியா
2. அன்பு, இரக்கம்
3. முந்நூறு
4. மக்கள்
5. i. சிறுமை+ஊர் ii. மூன்று+நூறு
6. வைப்பாள்
7. அநீதி
8. அன்பு
9. மேற்கோள் குறி

02. 1. வானம் 2. வலி

03. 1. எழுதினேன் 2. உடைந்தது

04. 1. நாம் எப்போதும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்போம்.
2. வெள்ளைக் கொக்குகள் கூட்டமாகப் பறந்தன.

05. 1. கன்று 2. குறைக்கும்

06. 1. குதிரை 2. நாய்

07. 1. கதிரவன், ஞாயிறு
2. வனம், வனாந்தரம்

08. 1. Sunday 2. Apple

09. 1. உனது பெயர் என்ன?
2. தயவு செய்து இரு

10. 1. நங்கி 2. மல்

11. 1. இது எனது பாடசாலை
2. உன்னுடைய வயது எத்தனை

12.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 6243 | 14. | i. | 27. | iii |
| | | | ii. 8 | 28 | i |
| 2. | 1.30 | 15. | ii | 29. | iii |
| 3. | 106 | 16. | i | 30. | iii |
| 4. | 105 | 17. | ii | | |
| 5. | 38 cm | 18. | ii | | |
| 6. | 552 | 19. | ii | | |
| 7. | 16 l | 20. | iii | | |
| 8. | 40 | 21. | i | | |
| 9. | 2599 | 22. | ii | | |
| 10. | 925 ரூபாய் | 23. | iii | | |
| 11. | 5/9 | 24. | i | | |
| 12. | i. 0 | 25. | ii | | |
| | ii. 8 | 26. | iii | | |
| 13. | 158.00 | | | | |

**41 ஆம் பக்கத் தொடர்...**

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | iii | 11. | i | 21. | iii |
| 2. | ii | 12. | iii | 22. | iii |
| 3. | iii | 13. | iii | 23. | ii |
| 4. | iii | 14. | ii | 24. | i |
| 5. | iii | 15. | ii | 25. | ii |
| 6. | i | 16. | ii | 26. | i |
| 7. | ii | 17. | ii | 27. | iii |
| 8. | iii | 18. | ii | 28. | i |
| 9. | iii | 19. | iii | 29. | iii |
| 10. | ii | 20. | ii | 30. | ii |
| | | | | 31. | ii |
| | | | | 32. | ii |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணங்களின் வண்ணங்கள் - 15

## தலைப்பு: நீர் வளத்தைப் பாதுகாப்போம்

### பரிசில்களை பெறும் சித்திரங்கள்



எம்.எஸ்.எம். ரஊஸ்
மதீனா தே.பா.
சியம்பலாகஸ்கொடுவ





முஆஸ் அஹமட்
ஜிலான் ம.க.
பாணந்துறை



உமைமா பைஸல்
க/இக்ரா முஸ்லிம் ம.வி.
உலப்பனை

### பாராட்டை பெறும் சித்திரங்கள்



ஏ.எப். அஸ்கா
எரு/மகளிர் ம.வி.
மன்னார்



எச்.எப். நஸ்ஹத்
எரு/மகளிர் ம.வி.
மன்னார்



பீ.எப். றிஸ்னா
எரு/மகளிர் ம.வி.
மன்னார்



இப்ஹாமா இஸ்மாயில்
பெலந்த மு.வி.
பெலந்த



எம்.எச்.எம். ஹஸீன்
சிறாஜிய்யா அ.க.
ஓட்டமாவடி



உ.எல்.எப். அப்ரா
குளி/மடிகே மிதியால ம.க.



ஏ.எப். சம்டஹா
எரு/மகளிர் ம.வி.
மன்னார்



இஸ்ரா இக்பால்
பெலந்த மு.வி.
பெலந்த



எம்.என்.நிஸ்லா இஸ்மத்
க/தெநு/அல் அஸ்ஹர் ம.க.
தெஹியங்க, முறுத்தலாவ



எஸ். ரிப்கான்
நேரிய குளம்
அநுராதபுரம்



ரிப்கா ஸாலிஹ்
[illegible] ம.க.
ஓட்டமாவடி



என்.எம். சஹ்லா
வெலம்பொட மு.ம.வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ENGLISH MEDIUM

## Grade 6, 7, 8, 9, 10, 11

## PROJECT BATCH

- Maths
- English
- History
- H.P.E
- Science
- English. Lit
- Citizenship
- Geography

Hurry for your place

With the help of well experienced panel of teachers individual attention will be given.

# TAMIL MEDIUM

## தரம் 6, 7, 8, 9, 10, 11

## PROJECT BATCH

மாணவர்களுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், வரலாறு**

ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்ட முறையில் கவனிக்கப்பட்டு கற்பிக்கப்படுவர்.

**கடந்த பல வருடங்களாக அனேக மாணவர்களின் "A" சித்திகளுக்கு வழிகாட்டி சாதனைகள் படைத்த ஆசிரியர்களின் வழிகாட்டல்களில் நீங்களும் பயனடையத் தவறாதீர்கள்.**

சிறந்த ஒழுக்க பண்பாடுள்ள கற்க ஆர்வமுள்ள மாணவர்களின் கல்வி நிலையம்

## NEWMAN'S COLLEGE
## Mawanella 035-3354625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org